
# சத்தியவசனம்

சஞ்சிகை

இலங்கை
சத்தியவசனம்
வெளியீடு

ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
2007



காலத்தின் கோலத்தில் அகப்பட்டுள்ள மனிதன் அழிந்துவிடப் போவதில்லை. காலத்தை தன் கரத்தில் வைத்திருப்பவரை மறுப்பவனே அழிவுக்குள்ளாவான்!

## உள்ளே ...


மேசை விரிப்பு


தேவன் ஒரு மரியாளைத் தேடுகிறார்


இனிய புத்தாண்டில் என் தியானவேளை


காலமெனும் கடலினிலே வாழ்க்கைப் படகு


நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - மார்ச் 2007

# சத்தியவசனம்

சஞ்சிகை

**பொருளடக்கம்** **பக்கம்**


| | |
|---|---|
| மேசை விரிப்பு | 02 |
| பிரச்சினைகளைக் கையாள்வது | 04 |
| தேவன் ஒரு மரியாளைத் தேடுகிறார் | 06 |
| பொய் பேசுவது பிழையா? | 09 |
| வேலைஸ்தலத்தில் கிறிஸ்தவன் | 13 |
| கேள்வி பதில் | 16 |
| பரமனுக்குக் கீழ்ப்படிந்த... | 18 |
| பணிபுரியும் பெண்ணின்... | 20 |
| இனிய புத்தாண்டில்... | 22 |
| சிறுவர் சோலை | 24 |
| நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று | 26 |
| காலமென்னும் கடலினிலே... | 28 |



முதன்மை ஆசிரியர் : திரு. ஜேம்ஸ் கனகநாயகம்

உதவி ஆசிரியர் : திரு. நீரியஸ் பெர்ணான்டோ



**Sathiyavasanam**
P.O. Box 1012, Colombo, Sri lanka.
Tele & Fax 011-2695441, 011-2698843
E-mail svsl@sltnet.lk Web: www.sathiyavasanam.lk


BACK TO THE BIBLE®
ச த் தி ய வ ச ன ம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**‘வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்.**
**உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.’**
**(சங்கீதம் 65:11)**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே

நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ் மற்றும் ஆசீர்வாதமான புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். அப்போஸ்தலனாகிய யோவான், தமது பிரியமான காயுவுக்கு எழுதிய பிரகாரம் புதிய ஆண்டிலே 'நீங்கள் உங்கள் ஆத்துமா வாழ்கிறதுபோல எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி உங்களுக்காக நாங்கள் வேண்டுதல் செய்கிறோம்' (3யோவான்2வச)

இம்முறை சஞ்சிகையில் ஆக்கங்களை எழுதிய அனைவருக்கும் எமது நன்றிகளை கூறிக் கொள்வதோடு, சஞ்சிகையைக் குறித்த உங்களது கருத்துக்களையும் நல்ல தரமான ஆக்கங்களையும் எழுதியனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். கடந்தமுறை டாவின்சி கோட் குறித்து சஞ்சிகையில் சிறப்புக் கட்டுரையாக வெளிவந்த திரு. எம் எஸ் வசந்தகுமார் அவர்களால் எழுதப்பட்ட ஒரு நீண்ட தொடர் கட்டுரையின் தொடர்ச்சியானது இம்முறை சஞ்சிகையில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. விரைவில் அது ஒரு புதிய புத்தகமாக வெளிவரவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

கடந்தமுறை ஆக்கங்கள் குறித்து அநேகர் கருத்துக்களை எழுதியிருந்தாலும் குறிப்பாக வவுனியா விலிருந்து புதிதாக தொடர்புகொண்ட ஒரு வாசகர் இப்படியாக எழுதியிருந்தார். **‘எதிர்பாராமல் உங்கள் சஞ்சிகையை வாசிக்கக் கிடைத்தது. அதில் இருந்த கட்டுரைகள் என்னை மிகவும் கவர்ந்தன. ஒரு மாணவியின் தீர்மானங்கள் என்ற கட்டுரை இறைவன்பால் ஆழ்ந்த தீர்மானம் செய்ய வழி செய்தது. ஒரே ஒரு சஞ்சிகையை வாசித்தவுடன் உங்களோடு தொடர்புகொள்ளவேண்டும் என்ற வாஞ்சை ஏற்பட்டது’** (எஸ். யோ. வவுனியா)

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கர்த்தரின் பணியில்,

அன்புடன்,

நீரியஸ் பெர்னாண்டோ

(சத்தியவசனம் – தமிழ்ப்பணி பொறுப்பாளர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு போதகர் தன் மனைவியுடன் தமது புதிய பணித்தளமான **sukurban Brooklyn**க்கு ஒக்டோபர் மாதம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அந்த ஆலயத்தைப் பார்த்தபோது அதில் அதிகமான திருத்தங்களைச் செய்யவேண்டியிருந்ததை அவதானித்தார்கள். எப்படியாவது கிறிஸ்மஸ் ஆராதனைக்கு முன் அந்த ஆலயத்தைத் திருத்தி முடிக்கவேண்டுமென தீர்மானித்து அதற்காக கடினமாக உழைத்தார்கள். ஆலய கூரையை மாற்றி, சுவரிலுள்ள வெடிப்புகளை திருத்தி, புதிய வர்ணம் தீட்டினார்கள். அவர்களுடைய இலக்கின்படியே டிசம்பர் 19ம் திகதிக்கு முன் ஆலயத்தை மறுசீரமைத்து விட்டார்கள்.

ஆனால் டிசம்பர் 21ம் திகதி இரவு எதிர்பாராத ஒரு சம்பவம் ஏற்பட்டது. அந்த பகுதியை முழுவதும் இரு நாட்களாக கடும் புயலும் இடியும் மழையும் ஏற்பட்டது. 23ம் திகதி காலை, மழை விட்டு வானம் வெறித்து காணப்பட்டது. போதகர் ஆலயத்தை பார்க்க வந்திருந்தார். ஆலயத்தின் கூரை சேதமடைந்திருப்பதைக் கண்டதும் அவரது இதயம் நொருங்கியது. அதுமட்டுமன்றி ஆலயத்தின் மத்தியிலிருந்த சுவரில் ஒரு பெரிய வெடிப்பு விழுந்திருந்தது. இந்த நிலையில் எப்படியாக கிறிஸ்மஸ் ஆராதனையை நடத்துவது என உள்ளத்தில் சிந்தித்தவராக, மெதுவாக எழுந்திருந்து மழை வெள்ளத்தினால் சகதியாயிருந்த ஆலயத்தின் தரையை கழுவி சுத்தம் செய்யத் தொடங்கினார். அத்துடன் வேறு ஒருவரின் துணையோடு ஒருவிதமாக ஆலயத்தின் கூரையையும் திருத்தியெடுத்தார். ஆனால் ஆலயத்தின் மத்தியிலிருந்த வெடிப்பை மட்டும் திருத்த கால அவகாசம் இருக்கவில்லை.

அன்று மாலை அவர் அந்த ஊரின் கடைத்தெரு வழியாக நடந்து சென்றுக்கொண்டிருந்தபோது ஒரு சமுகசேவை நிலையத்துக்குச் சொந்தமான பாவித்த கைப்பணிப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்தைக் கண்டு அங்கு போனார். அங்கிருந்த ஒரு மேசை விரிப்பு அவரை மிகவும் கவர்ந்தது. கை வேலைப்பாடுகள் நிறைந்த அந்த அழகிய மேசை விரிப்பின் மத்தியில் சித்திர தையல் வேலைப்பாடுகள் மிக நேர்த்தியாக செய்யப்பட்டிருந்தது. அவர் அதனை வாங்கி ஆலயத்திற்கு கொண்டுவந்தார். அது ஆலயத்தில் மத்திய சுவரில் ஏற்பட்டிருந்த வெடிப்பை மறைக்க அது கச்சிதமாயிருந்தது.

அந்த சமயத்தில் மறுபடியும் மழைபெய்யத் தொடங்கியது. ஆலயத்தின் வெளியே ஒரு வயது முதிர்ந்த தாயார் தன் பேருந்தை பிடிப்பதற்காக எதிர்புறமாக ஓடினாள். ஆயினும் அவள் அந்த பேருந்தை தவறவிட்டு விட்டாள். அதைக் கண்ட போதகர், அடுத்த பேருந்து வரும்வரை அவளை ஆலயத்திற்குள் வந்து அமர்ந்திருக்கும்படி அழைத்து வந்தார்.

அவளும் வந்து ஆலயத்திலுள்ள கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்தாள். அடுத்த பேருந்து வர இன்னும் 45 நிமிடங்கள் செல்லும் என அவளிடம் கூறிவிட்டு, போதகர் ஒரு ஏணியையும் ஆணியையும் எடுத்து தான் வாங்கி வந்த மேசை விரிப்பினை ஆலயத்தின் நடுவே வெடிப்புள்ள சுவரை மறைக்கும் வண்ணம் அதை தொங்குசீலையாக தொங்கவிட்டார்.

போதகர் ஆலயத்தின் நடுவே மேசை விரிப்பை தொங்கவிடுவதைப் பார்த்துக்கொண்டிருந்த அம்முதிய பெண்மணியின் முகம் அதிர்ச்சியினால் திடிரென சிவந்தது. உடனே அவள் "போதகரே" என அழைத்தாள். போதகர் சற்றே தன் வேலையை நிறுத்திவிட்டு "என்ன?" எனக் கேட்டார். "இந்த மேசை விரிப்பினை நீங்கள் எங்கு வாங்கினீர்கள்?" என்று சற்று அதட்டலோடு கேட்க, போதகரும் அவளுக்கு நடந்ததை கூறினார். "அந்த மேசைவிரிப்பின் மூலையில் **EGB** என்று எழுதப்பட்டுள்ளதா?" என்று கேட்க போதகரும் "ஆம்" எனப் பதிலளித்தார். உடனே அப்பெண்மணி "அவை என்னுடைய பெயரின் முதல் எழுத்துக்களாகும். இந்த மேசைவிரிப்பு சுமார் 35 வருடங்களுக்குமுன் நான் ஆஸ்ரேலியாவில் இருக்கும்போது நானே பின்னியதாகும். யுத்தத்திற்கு முன்பு நானும் எனது கணவனுமாக ஆஸ்ரேலியாவின் மிகவும் சந்தோஷமாய் வாழ்ந்து வந்தோம். ஆனால் அங்கு திடீரென ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக நானும் என் கணவரும் நாட்டைவிட்டு வெளியேற தீர்மானித்தோம். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அங்கிருந்த ஆண்களையெல்லாம் கைது செய்ததால் என் கணவரும் அவர்களுடன் சிறை வைக்கப்பட்டார். அதன் பின் கடந்த 35 ஆண்டுகளாக நான் என் கணவனை காணவில்லை. அவரும் வீடு திரும்பவில்லை" என கண்ணீரோடு தன் கதையைச் சொல்லி முடித்தாள்.

அவளது கதையை கேட்ட போதகர் அந்த மேசை விரிப்பினை திரும்பவும் அவளுக்கே கொடுக்க விரும்பினார். ஆனால் அவளோ அதை வாங்க மறுத்து விட்டாள். உடனே போதகர் அவளுக்கு தன்னாலான உதவியைச் செய்ய விரும்பி, தன் வாகனத்தில் அவளை ஏற்றிக்கொண்டு அவளது வீட்டிற்குக்கொண்டு போய்விட்டார். அவள் பக்கத்து ஊரின் மறுகோடியில் இருந்தாள். அங்கு ஒரு வீட்டில் பணிப்பெண்ணாக துப்பரவாக்கும் வேலையை செய்துவந்தாள்.

டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்மஸ் ஆராதனை மிக அருமையாக நடந்து முடிந்தது. ஆலயம் மக்களால் நிரம்பியிருந்தது. இசையும் பாடல்களும் மிக அருமை யாக இருந்தன. ஆராதனையின் இறுதியில், போதகரும் அவரது மனைவியும் வாசலருகே நின்று ஒவ்வொரு வரையும் வாழ்த்தி அனுப்பினார்கள். ஆனால், ஒரு முதியவர் மட்டும் தனது ஆசனத்தில் அமர்ந்து, எதையோ வெறித்து உற்றுநோக்கிக் கொண்டிருந்தார். அவர் தமது அயல் வீட்டுக்காரர் என்பதை கண்டுக் கொண்ட போதகர், இவர் ஏன் வீட்டுக்குப் போகாமல் இன்னும் அமர்ந்திருக்கிறார் என எண்ணியவராக ஆச்சரியப்பட்டு முதியவரை அணுகினார். உடனே அந்த முதியவர் போதகரை நோக்கி, "ஆலயத்தின் நடுவில் தொங்கிக் கொண்டிருக்கும் இந்த மேசை விரிப்பினை எங்கு வாங்கினீர்கள்?" என்று கேட்டுவிட்டு, போதகரின் பதிலுக்கு காத்திராமல் "இந்த மேசைவிரிப்பு அநேக வருடங்களுக்குமுன் நான் ஆஸ்ரேலியாவில் இருந்தபோது என்னுடைய மனைவி உருவாக்கிய மேசை விரிப்பைப் போலிருக்கிறது. அங்கு உள்நாட்டு யுத்தம் காரணமாக நானும் என் மனைவியும் நாட்டை விட்டு வெளியேறும்போது, நான் அங்கிருந்த தீவிரவாதி களால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டேன். அதன்பின் என் மனைவியை என்னால் சந்திக்கவே முடியவில்லை" என அந்த முதியவர் கூறி முடித்தார்.

முதியவர் கூறியதை பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த போதகர், அவரை நோக்கி: "உங்களை ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன்" எனக்கூறி அவரை தனது வாகனத்தில் ஏற்றி, பக்கத்து ஊரின் மறுகோடிக்கு அழைத்துச் சென்றார். இருநாட்க ளுக்கு முன் தன் ஆலயத்திற்கு வந்த அந்த முதிய பெண்மணி வேலைசெய்யும் அதே வீட்டிற்கு அவர்கள் வந்துசேர்ந்தார்கள். அந்தப் பெண்மணி இருந்த மூன்று மாடி கட்டிட படிக்கட்டுகளில் ஏற அந்த முதியவருக்கு போதகர் உதவினார். இருவரும் வாசலுக்கு வந்ததும் கதவைத் தட்டினார்கள். அப்பொழுது உள்ளேயிருந்து "யாரது" எனக் கேட்டுக்கொண்டு, அந்த வயது முதிர்ந்த பெண்மணி கதவை திறந்துகொண்டு, முன்னால் வர, அவ்விடத்தில் நாம் கற்பனையிலும் சித்தரிக்கமுடியாத பிரிந்திருந்த உறவுகள் ஒன்றுசேரும் ஒரு உணர்ச்சி பூர்வமான உண்மைக் கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் ஐக்கியத் தினை போதகர் நேரில் கண்டார். ஆம், நம்முடைய ஆண்டவர் நாம் நினைத்திராத வழிகளில் கிரியை செய்கிறவர். ❑

## பிறருடன் பழகும் முறைகள்

வயதிலும் அந்தஸ்திலும் நம்மைவிட உயர்ந்திருந்தால் அவருடன்
மரியாதையுடனும் கண்ணியத்துடனும் பழகவேண்டும்.

நம்முடைய வயதுக்கு சமமானவரிடம் பழகினால்
வாக்குறுதியைக் காப்பாற்ற பழகவேண்டும்.

வயதிலும் அந்தஸ்திலும் நம்மைவிட குறைவானவரிடம் பழகினால்
இரக்கத்துடனும் அன்புடனும் பழகவேண்டும்.

அறிஞரிடம் பழகினால் அவருக்குரிய மரியாதையைச் செலுத்தவேண்டும்.
அவருடன் விவாதம் செய்வது கூடாது.

செல்வந்தருடன் பழகினால் அவரிடமிருந்து எதையும்
எதிர்பார்க்கக் கூடாது.

ஏழையுடன் பழகினால் அவருக்கு நம்மால் இயன்ற அளவு
உதவிகளைச் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரச்சினைகளைக் கையாள்வது எப்படி?

ஜேம்ஸ் கனகநாயகம்

மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெற்று வரும் பிரச்சினைகளை தினந்தோறும் நாம் தொலைக்காட்சிகளில் காண்கிறோம். இலங்கையின் வடக்கு, கிழக்கில் நடைபெறுபவற்றை செய்தித்தாள்களில் வாசிக்கிறோம். சில இடங்களில் கொள்ளையர்களால் பலகோடி பணம் கொள்ளையடிக்கப்படுகின்றன. மக்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்படுகிறார்கள். நாடுகளின் பொருளாதாரம் நாளுக்கு நாள் கீழ்நோக்கிச் செல்கிறது. இதன் மத்தியில் ஏழைகள் தள்ளாடுகிறார்கள். சுகாதாரத்திற்காகவும் மருத்துவ வசதிகளுக்காகவும் நோயாளிகள் நீண்ட வரிசையில் நிற்கிறார்கள். தொழிலற்ற பட்டதாரி மாணவர்கள் தொழிலுக்காக ஏங்கித் தவிக்கிறார்கள்.

அநீதி, நம்பிக்கையீனம், முரண்பாடுகள் ஆகிய வார்த்தைகளே இந்நாட்களை விளக்க போதுமானவை. கவலைத்தரும் விடயம் என்னவென்றால் பிரச்சினைகள் வெளியில் மட்டுமன்றி, திருச்சபைக்குள்ளும் சங்கங்களுக்குள்ளும் ஏன் கிறிஸ்தவ குடும்பங்களுக்குள்ளும் காணப்படுகின்றன. அநேக கிறிஸ்தவ குடும்பங்கள் உடைந்துபோயுள்ளன. பல இடங்களில் "சண்டையுமில்லை, சமாதானமுமில்லை" என்ற சூழ்நிலை காணப்படுகின்றது. இவைகள் பிரச்சினைகளை சரியாக கையாளாதபடியினால் ஏற்படுகின்றன.

நீங்கள் எப்படி பிரச்சினைகளை சமாளிக்கிறீர்கள்? உதாரணமாக, ஒரு கொலை அச்சுறுத்தலுக்கு நீங்கள் இலக்காவீர்களானால் அதை எப்படி நீங்கள் சமாளிப்பீர்கள்? மோட்டார் துப்பாக்கி அல்லது குண்டுசத்தம் அருகில் கேட்குமானால் உடனே அந்த பிரச்சினையை எப்படி கையாளுவீர்கள்? எல்லா சூழ்நிலைகளும் தலைக்குமேலாக சென்று உங்கள் வாழ்க்கையைக் குறித்த பயமும் திகிலும் ஏற்பட்டால் உடனே அத்தகைய சூழ்நிலையில் நீங்கள் உணர்வது என்ன? சிலர், தேவன் தமது முகத்தை மறைத்து தன்னைவிட்டு விலகிவிட்டதாக எண்ணுவார்கள். வேறு சிலர், தேவன் தமக்கு தீமையை அனுமதித்தமையால் தமது வாழ்வை குறித்து கோபப்படுவார்கள். சர்வவல்லமையுள்ளவர் மீது தமது நம்பிக்கையை இழந்தவர்கள், "தன் கையே தனக்குதவி" என நினைப்பார்கள்.

"சபையிலும் வீட்டிலும் நிறுவனத்திலும் நாட்டிலும் எவ்வாறு பிரச்சினைகளைக் கையாள்வது?" என்பதைக் குறித்து ஒரு குழுவில் கலந்துரையாடிய போது, வாழ்வை ஆதாரமாகக் கொண்டு பிரச்சினைகளைக் கையாளும்போது சில காரியங்கள் அவசியமானவைகளாகும் என்பதை கண்டுகொண்டோம். அவைகளாவன: ஜெபம், மற்றவர்களுக்கு செவிகொடுத்தல், அவர்களது வித்தியாசமான கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுதல், தெளிவான சட்ட நியதிகளை கொண்டிருத்தல், மன்னித்தல், பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவரத்தக்கதாக செயற்படுதல் ஆகியவைகளாகும்.

சரியான தொடர்பு மற்றும் உறவுகளைக்குறித்து இயேசுகிறிஸ்து உபதேசித்துள்ளார். பலியிடுவதையும் சேவை செய்வதையும்விட சரியான உறவுகளை மகிழ்ந்து அனுபவித்தல் முக்கியமானவைகளாகும் (மத். 5:23-24). "அன்பில்லாத சேவைகளும் தானதர்மங்களும் ஒன்றுக்கும் பிரயோசனமற்ற காரியம்" என பவுல் எழுதுகிறார் (1கொரி 13:1-3). நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஐக்கியத்தையே வலியுறுத்தியுள்ளார். மற்றவர்களோடுள்ள நமது ஐக்கியமே தேவனுடனான ஐக்கியத்தை பிரதிபலிப்பதாகும். மத்தேயு 5:44-45 ல் இயேசு கூறினார்: "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்கிறதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். இந்தப் பகுதியில் இயேசுகிறிஸ்து தேவனின் நிகரற்ற அன்பைப்பற்றியும் தேவனுடைய பிள்ளைகள் தமது பிதாவினுடைய குணாதிசயத்தை பிரதிபலிக்க வேண்டியதின் அவசியத் தையும் குறிப்பிடுகிறார். ஆம், சரியான உறவு தேவனுக்கு மிகவும் முக்கியமானது.

பிரச்சினைகளைக் கையாள்வதைக் குறித்த சில ஆலோசனைகள்:

**முழங்கால் படியிடுங்கள்:**

தேவனுடைய பிள்ளைகளுக்கு ஜெபம் செய்வதே மிக பாக்கியமான காரியமாகும். இதுவே நாமும் செய்யவேண்டிய முதலாவது காரியமாகும். பல்வேறுப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருந்த பிலிப்பிய சபைக்கு பவுல் எழுதுவது என்னவென்றால், "எல்லாவற்றையுங்குறித்தும் நீங்கள் விண்ணப்பம் பண்ணுங்கள்" என்பதேயாகும். மோசே யின் அன்றாட வழக்கங்களில் ஒன்று, அவர் வழி நடத்திச் சென்ற எபிரேய மக்கள் கொடுத்த சகல பிரச்சினைகளையும் தேவைகளையும் உடனே தேவ சமுகத்திற்குகொண்டு செல்வதுதான். ஒரு பாமாலை இவ்விதமாக கூறுகிறது: "பாவ சஞ்சலத்தை நீக்க பிராண சிநேகிதனுண்டே, பாவபாரம் தீர்ந்துபோக மீட்பர் பாதம் தஞ்சமே, லோக துக்கம் துன்பத்தாலே நெஞ்சம் நொந்து சோருங்கால், துன்பம் இன்பமாக மாறும் ஊக்கமான ஜெபத்தால்."

**எழுந்து நில்லுங்கள்:**

சரியான ஆதாரமில்லாமல் ஒருவனை குறை சொல்வதோ, நியாயந்தீர்க்கவோ வேண்டாமென வேதாகமம் எமக்கு அறிவுரை வழங்குகிறது (மத்.7:1-5). அதேசமயம், மற்றவர்களை எவ்வாறு திருத்துவது என்பதைக்குறித்து தேவன் நமக்குக் கற்பிக்கிறார். யோவான் 8ல் இயேசுவானவர் விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணை நீதியாகவும் கௌரவமான முறையிலும் திருத்துகின்றார். தம்மை பின்தொடர்ந்து வந்தவர் களிடங்கூட, தேவனுக்குக் கீழ்ப்படிவதைவிட தங்கள் இனத்தைக்குறித்து பெருமை பாராட்டியவர்களை மிகவும் கடினமாக கண்டித்தார். அப்படியாக அவர் அவர்களின் மனங்களைத் திருத்துகிறார்(யோவான் 8:41-47). மத்தேயு 18:16-17 ல் இயேசு, ஒருவரை எப்படி திருத்துவது என்பதைக்குறித்த பிரமாணங்களை கூறுகிறார். சாட்சிகளுடனும் ஆதாரங்களுடனுமே பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவரவேண்டும். பிரச்சினைகளைக் கையாளும்போது சரியான காரியத் திற்காக எழுந்து நிற்பது அவசியமானதாகும்.

**விலகி நடவுங்கள்:**

ஒருவன் தொடர்ந்து பிடிவாதமாக தவறான வழியில் செல்வானென்றால் நாம் விலகி நடக்க வேண்டுமென்பதாக நமதாண்டவராகிய இயேசு கற்பித்தார். அதைக்குறித்து இவ்விதமாக கூறினார், "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள். உங்கள் முத்துக்களைப் பன்றிகள்முன் போடாதேயுங் கள். போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்" (மத்தேயு 7:6). திருமணம் அல்லது சபையில் ஏற்படும் பிரச்சினைகளினால் அதனை முறித்துகொண்டு அதைவிட்டு வெளியேறுவதைக் இது குறிக்காது. நாம் அந்த பிரச்சினைக்கு காரணகர்த்தாவாகாமலும் இடறலை உண்டுபண்ணாமலும் இருத்தல் அவசியம் என்பதையே இது குறிக்கிறது. (மத் 18:7)

**போராடுதல் :**


நாம் பிரச்சினைகளைக் கையாளும்போது, உண்மைக்காக தைரியமாக எதிர்த்து நின்று போராடுவது மிக அவசியமானதாகும். (மத்தேயு 18:7, பிரசங்கி 3:8). அதாவது சில காரியங்களில் எதிர்த்து போராடாவிட்டால், அவை அநேகரின் நல்வாழ்வை அழித்து பாழாக்கும். கடந்த காலங்களில் திருச்சபை வரலாற்றில் சத்தியங்களுக்காகவும், நீதியில் கலப்பில் லாதிருக்கவும், அக்கிரமங்கள், பயமுறுத்தல்கள் ஆட்சியாளரின் பயம் ஆகிய விடயங்களுக்காக திருச்சபை எதிர்த்து நின்றதுண்டு. பிரச்சினைகளைக் கையாள்வதில் கிறிஸ்தவ முறையானது ஒருபக்க கண்ணையோ, காதையோ, வாயை அடைத்து விடுவதல்ல. உங்கள் தலைகளை உயர்த்தி சரியாக நீதி செய்யும்போது பாதிக்கப்படுகிறவர்களும் நாளைய தினத்தில் சந்தோஷமாயிருப்பார்கள்.

ஆகவே, பிரச்சினைகளைக் கையாளும்போது ஜெபித்தலும் (முழங்கால்படியிடுதல்), எழுந்து நிற்பதும் (தைரியமாக), விலகி நடப்பதும், சத்தியத்திற்காக போராடுவதும் அவசியமாகும். இவையனைத்தையும் நாம் கிறிஸ்துவுக்காக செய்ய வேண்டுமே தவிர, எமது சொந்த சுயநலத்திற்காக செய்யக்கூடாது. நாம் தரிசித் தல்ல, விசுவாசித்து நடக்கிறவர்களாய் இருப்போமாக. நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான். மேலும் நாம் எல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே (ரோமர் 14:10-12). கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவன் ஒரு மரியாளைத் தேடுகின்றார்...



**கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்றான் (லூக்கா 1:28).**

"புதிய ஆடை, புதுப்புது உணவுப்பண்டங்கள், ஆடல்பாடல், இதுதான் பிறந்தநாள் கொண்டாட்டம் என சிறுவயதுமுதல் நினைத்திருந்தேன்; செய்தும் வந்தேன். அப்படியான ஒரு உணர்வைத்தான் கிறிஸ்துவின் பிறந்த நாளும் எனக்குத் தந்தது. அப்படித்தான் அந்தநாளை பிறரோடு சேர்ந்து கொண்டாடி மகிழ்ந்திருந்தேன். ஆனால் கிறிஸ்து எனக்குள் பிறந்தபோது, என்னை அவர் நேசிக்கிறார் என்று அறிந்தபோது, எனக்காகவே சிலுவையில் மரித்து உயிர்த்தார் என்பதை உணர்ந்த போது, கிறிஸ்மஸ் நாளைக் குறித்த என் சிந்தனை முற்றாக மாற்றமடைந்தது. கொண்டாட்டத்திற்கு பதில் நன்றியால் என்னுள்ளம் பெருகியது. எனக்காகவே யாவும் செய்தார் என்ற நினைவு, கிறிஸ்மஸ் நாளின் அர்த்தத்தையே மாற்றிப்போட்டது. இயேசு பிறந்தநாள் என்பதிலும் என்னை இரட்சிப்பதற்கென்று இயேசு வந்து பிறந்தார் என்ற சிந்தனை கிறிஸ்மஸ் தினத்தைக் குறித்து புதிய அர்த்தத்தைக் கொடுத்தது. கிறிஸ்மஸ் வெறும் குடிப்பும் புசிப்புமல்ல. புதுவாழ்வு தர மீட்பர் வந்துதித்த இந்த நாளின் சந்தோஷ செய்தி பிறருக்கும் அறிவிக்க வேண்டுமே என்ற உணர்வையும் எனக்குள் தூண்டிவிட்டிருக்கிறது." இவ்விதமாக ஒரு சகோதரி கிறிஸ்மஸ் தினம் தனது வாழ்வில் கொடுத்த அர்த்தத்தைப்பற்றி கூறினாள். சுருங்கச் சொன்னால் இயேசு இவள் வாழ்வில் பிறந்ததால், இவளும் அவருக்குள் பிறந்ததால், ஆண்டவருக்கென புதிய குழந்தைகளை உருவாக்கும் தாகம் இந்த சகோதரிக்குள் எழுந்திருக்கிறது. சுருங்கச் சொன்னால் ஆண்டவர் அவளை இன்னொரு மரியாளாக மாற்றிவிட்டார்.

மரியாள் என்றதும் அவள் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஏழைப் பெண், யோசேப்புக்கு நியமிக்கப்பட்டவள், தேவதூதன் வந்துசொன்ன தேவ செய்திக்குத் தன்னை அடிமையாக ஒப்புவித்தவள்.

**- சாந்தி பொன்னு -**

தனக்கு விளையக்கூடிய எந்தவொரு இழப்பையும் கணக்கிடாமல், தேவகுமாரனைக் கர்ப்பந்தரித்து, பெற்று எடுத்தவள்; அவள் ஆசீர்வதிக்கப்பட்டவள் என்ற சிந்தனைகள்தான் நமக்கு வருவதுண்டு. ஆனால் ஒரு பெண்ணுடைய வாழ்வு ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்வென்று உலகரீதியாக நாம் எப்போது சொல்லுவோம். அவளுக்குத் திருமணமானால் மாத்திரம் போதாது. அவள் கர்ப்பந்தரிக்கவேண்டும். ஒரு பெண் கர்ப்பந்தரிக்கும்போது ஏற்படுகின்ற சந்தோஷம் எல்லாவற்றிலும் பெரிய சந்தோஷம். அதேசமயம் கர்ப்பம்தான் ஒரு பெண்ணுக்கு ஆசீர்வாதமா? இல்லை. திருமணமாகாமல் கர்ப்பந்தரித்தால் சமுகத்திலே அவளுக்கு என்ன பெயர் என்பது நாம் அறியாததல்ல. ஆகவே கர்ப்பந்தரிப்பவர்கள் யாவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று சொல்ல கூடாதே. அப்படியானால் இந்த மரியாள் ஆசீர்வதிக்கப்பட்டவள், அதிலும் பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் என்று எப்படிச் சொல்ல முடியும்?

ஆம், மரியாள் ஆசீர்வதிக்கப்பட்டவள்தான். யூத பெண்கள் யாவரும் மேசியா தன் வயிற்றில் வந்து பிறக்க மாட்டாரா என்று ஏங்கித் தவித்திருக்க, இந்தப் பெண் தேவனாலே தெரிந்தெடுக்கப்பட்டாளே, இவள் ஆசீர்வதிக்கப்பட்டவள்தான். சரீர உறவு என்னவென்பதை அறியாதிருந்த போதும், இவள் கர்ப்பம் தேவனால் உண்டானதே, இவள் ஆசீர்வதிக்கப்பட்டவள்தான். அநாதி தீர்மானமாகிய மேசியாவின் வருகையை நிறைவேற்றத்தக்கதாக இவளது வாழ்வை தேவன் தகுதி என்று கண்டாரே, இவள் ஆசீர்வதிக்கப்பட்டவள்தான். கன்னியாக கர்ப்பந்தரித்தபோதும், வாழ்வை இழந்து விடாமல் நியமித்த கணவனுக்கே மனைவியானாளே இவள் ஆசீர்வதிக்கப்பட்டவள்தான். அனைத்திற்கும் மேலாக தேவதூதனின் வார்த்தையை நம்பி, தன்னை முற்றுமாக ஒப்புக்கொடுத்தாளே, இவள் ஆசீர்வதிக்கப்பட்டவள்தான். திறப்பின் வாசலில் நிற்க ஒருவனைத் தேடினேன், ஒருவனையும் காணவில்லை என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனைப்பட்ட கர்த்தர், தாம் வந்து பிறக்க ஒருவரைத் தேடியும் ஒருவரையும் காணவில்லை என்று சொல்லாத படிக்கு மரியாள் தெரிந்தெடுக்கப்பட்டதால், அவள் ஆசீர்வதிக்கப்பட்டவள்தான். கடைசிவரைக்கும் தேவன் அவளோடேகூட இருந்தாரே, அவள் ஆசீர்வதிக்கப்பட்ட வள்தான். யாவற்றுக்கும் ஒரு கிரீடம் வைத்தாற்போல தேவனுக்கென்று கர்ப்பந்தரிக்கும் ஒரு பாத்திரமாகக் காணப்பட்டு, அந்தக் கர்ப்பத்தைச் சுமந்தாளே, அவள் ஆசீர்வதிக்கப்பட்டவள்தான்.

அப்படியானால் அன்றிருந்த மற்ற யூதப்பெண் களின் நிலை என்ன? அவர்கள் குற்றமுள்ளவர்களா? மரியாள் மாத்திரம் குற்றமற்றவளா? அப்படியல்ல. மரியாளுக்குத் தேவனுடைய கண்களில் கிருபையும் தயையும் கிடைத்தது. ஆகவே அவள் ஆசீர்வதிக்கப் பட்டாள். கிருபை என்பது பாரபட்சமற்றதொரு ஈவு. யூதாவில் பல கன்னிகைகள் இருந்தும் தேவன் மரியா ளைக் கண்டார். அவளின் மனதைக் கண்டார். தமக் கென அவள் தன்னைக் கொடுப்பாள் என்று அறிந்தார், நம்பினார். அவளது கீழ்ப்படிவு, தாழ்மை, உண்மை, கற்பு யாவும் ஒன்றிணைந்து தேவனுடைய பார்வையை அவள் பக்கம் ஈர்ந்திழுத்தது. அந்தப் பார்வை நம் பக்கம் திரும்புமானால் தேவன் நம்மையும் ஒரு மரியா ளாகக் காண்பாரா?

ஆண்டவர் இன்றும் மரியாள்களைத் தேடுகி றார். அவர் மீண்டும் வந்து பிறக்கப்போவதில்லை. ஆனாலும் அவருக்காகக் கர்ப்பந்தரிக்கும் பெண்களைத் தேடுகிறார். மரியாளோ தேவனுக்கென்று தேவனாலே கர்ப்பத்தைச் சுமக்க முன்வந்தாள். இன்றும் தேவனுக் கென்று தமது கர்ப்பத்தைப் பரிசுத்தப்படுத்தி, அவருக் கென்று ஒரு சந்ததியை உருவாக்கும் மரியாள்களைத் தேவன் தேடுகிறார். என் கர்ப்பத்தின் கனி தேவனுக்கு என்று சொல்லியே தமது கர்ப்பத்தைச் சுமக்கும் பெண் களைத் தேவன் தேடுகிறார். திருமணமாகியதும் ஒரு குழந்தையைப் பெற்றுவிடவேண்டும் என்ற வாஞ்சை தான் சாதாரணமாக எந்தவொரு பெண்ணுக்கும் ஏற்படு கிறது. ஆனால் ஒரு குழந்தையைத் தேவனுக்கென்று நான் பெற்றெடுக்கவேண்டும் என தன்னை அர்ப்பணிக் கும் ஒரு பெண்தான் இன்று தேவனுக்கு வேண்டும். தேவகிருபை மரியாளுக்குக் கிடைத்தது ஒரு காரியம். மறுபக்கத்தில், மரியாளிடம் காணப்பட்ட அன்பு, அடக்கம், கற்பு, தாழ்மை ஆகியன தேவகுமாரனைச் சுமக்கும் பாத்திரமாக அவளை உயர்த்தியது. இன்று தேவன் அந்த மரியாளை நம்மில் காண்பாரா?

**உலக ரீதியான கிறிஸ்மஸ்**

அன்பு சகோதரியே, தேவனுக்கென்று காணிக்கை கொடுக்கின்ற நீ, தேவனுக்கென்று பல காரியங்களைச் செய்யும் நீ, தருணத்தில் என்னையே ஒப்புவிக்கிறேன் என்று பாடுகின்ற நீ, குறிப்பாக, தேவனே என் கர்ப்பப்பையையே உமக்கென்று ஒப்புவிக் கிறேன்; அதைப் பரிசுத்தமாய் பாதுகாத்து உமக்கென்று ஒரு உத்தம சந்ததியை உருவாக்குகின்ற உறுப்பாக, அதை மாற்றும் என்று ஜெபித்திருக்கிறாயா? இன்றைய நவநாகரீக பெண்கள், தம்மையும் தமக்கென்று தேவன் அமைத்துக்கொடுத்த சரீர உறுப்புகளையும் குறித்து எந்தவித பொறுப்பும் கவனமும் இல்லாமல் நடப்பதை நினைக்கும்போது கண்ணீர்விடாமல் இருக்கமுடியாது. இன்று திருமணமாகாமல் கள்ளத்தனமாக கர்ப்பந்தரிக் கும் பெண்கள், அதிலும் படிக்கின்ற வயதுப்பெண்கள் கர்ப்பந்தரிக்கும் எண்ணிக்கை நமது நாட்டிலும் அதிகரி த்து வருகிறதை நாம் இந்த நத்தார் நாட்களில் சிந்திக்க வேண்டும். மாத்திரமல்ல, திருமணமானாலும் தாமே திட்டங்களைப் போட்டு கர்ப்பத்தை அடைத்துவிடுகின்ற வர்களும் ஏராளம். இன்னும் தமது ஆசைக்கும் இச்சைக்குமாக கர்ப்பத்தைத் திறந்துகொடுக்கும் பெண் களோ அதிலும் ஏராளம். திருமணமாகி கர்ப்பந்தரித்தா லும் பல காரணங்களைச் சொல்லி அதை அழித்துவிடு கின்ற பெண்களும் அநேகர் உள்ளனர். ஆவிக்குரிய பல காரியங்களை சிந்திக்கின்ற நாம் பல தடவைகளி லும் நமது சாதாரண உலகவாழ்வை சரீரவாழ்வை மறந்துவிடுவதுண்டு.

தேவபயமற்ற மனம்போன வாழ்க்கைமுறைக ளும், சுயமான சிந்தனைகளும், பெருமை, கீழ்ப்படி யாமை, அடிமையாய் ஒப்புக்கொடுக்கும் அர்ப்பண சிந்தை அற்றுப்போன நிலைமை, தன் சந்தோஷத்தைக் கணக்கிடாமல் தேவனுக்கென்று சிலுவை சுமக்க மறுக் கும்தன்மை, தான் ஒரு பெண் என்ற சிந்தனையே அற்றுப்போன குருட்டுநிலைமை, சுகபோகங்கள், வாழ் வை அனுபவிக்கத் துடிக்கும் வேகம், இவை எல்லாமே இன்றைய பெண்களை மரியாளின் நிலைமையிலிருந்து தூரத் தள்ளிப்போட்டது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். இதோ, கிறிஸ்மஸ் நாள் வந்துவிட்டது. ஆண் பெண் வித்தியாசமின்றி குடியும் கூத்தும் கும்மாள மும் சர்வசாதாரணமாகிவிடும். எத்தனை பெண்கள் இந்த நாட்களில் தம்மை விநோதமாக அலங்கரித்துக் கொண்டு வீதியிலே வலம்வரப் போகிறார்கள். நத்தார் ஆராதனைக்கும் ஆடை அலங்காரத்துக்கும் எவ்வள வாய் முக்கியத்துவம் கொடுக்கப்போகிறார்கள். ஆனால் கர்த்தரோ, 'பெண்ணே, உனக்கு அவரளித்த உன் கர்ப்பம் தனக்கென்று வேறுபிரிக்கப்பட்டுள்ளதா' என்று ஏங்குகிறார். உன் சரீரம் அவருக்கென்று பாதுகாக்கப் படுகிறதா என்பதைக் கவனிக்கிறார். உன் வாழ்வின் தூய்மையை கணக்கிடுகிறார். மரியாளைக் குறித்த பிரசங்கங்களைக் கேட்டு மரியாளைப் பற்றிய நாடகங் களை நடித்து கீதங்கள் பாடியது போதும். தன் கரத்தி னால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு பெண்ணும் மரியா ளாகவே மாறவேண்டும் என்று தேவன் ஏங்குகிறாரே. அதற்கு நமது பதில் என்ன? இன்று தேவன், தமக்கென பிள்ளைகளைச் சுமக்கும் பாத்திரமாக உன்னைக் காண்பாரானால் அதுதான் உனக்கும் உன் குடும்பத் துக்கும் உண்மையான கிறிஸ்மஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரியே, இதுவரை நீ எப்படியும் வாழ்ந்திருக்கலாம். உன் கர்ப்பம் காயப்பட்டிருக்கலாம், அழுக்கடைந்திருக்கலாம். அப்படியானால் நான் தேவனுக்குப் பிரயோஜனமற்றவளா என்று நீ கலங்கவேண்டாம். துக்கப்படவேண்டாம். மரியாளின் கர்ப்பப்பையை ஆசீர்வதித்த தேவனிடம் இப்போதே திரும்பு. அவர் உன் வாழ்வை நிச்சயம் புதுப்பிப்பார். இன்று அநேக பெண்கள் தங்கள் சரீரங்களைக் காட்சிப்பொருளாகவும் இச்சைக் குரிய கூடமாகவும் மாற்றிவிட்டிருப்பதைக் காணுகிறாயா? அதைக் காணமுடியாமலும் உணர முடியாமலும் எத்தனை பெண்கள் தாய்மார் நாகரீகம் என்ற போர்வையில் அகப்பட்டிருக்கிறார்கள். சகோதரி, உன்னை தேவன் தேடுகிறார்.

கிறிஸ்தவ பெண்ணே! தேவன் இன்றும் தமது குழந்தைகளைப் பெற்றெடுக்கக்கூடிய மரியாள்களைத் தேடுகிறார். தூய்மையான கர்ப்பப்பைகளைத் தேடுகிறார். அவர் தேடும் மரியாளாக நீ காணப்படவேண்டும். உன்னையும் உன் சரீரத்தையும் குறிப்பாக சந்ததியை உருவாக்கும் உடல் உறுப்புகளையும், தனக்கென ஒரு சந்ததியை உருவாக்கும் ஒரு உன்னத பாத்திரமாக உன்னைப் படைத்த உன் தேவனிடம் நீ இப்போதே ஒப்புக்கொடு. அவர் சகலத்தையும் மாற்றி அமைப்பார். தேவன் உன்னையும் ஒரு மரியாளாகக் காண்பாராக. உன் கர்ப்பத்தில் உருவாகும் கர்ப்பங்களைத் தேவனுக்கென்று ஒப்புக்கொடு. நீயும் ஆசீர்வதிக்கப்படுவாய்.

### ஆவிக்குரிய கிறிஸ்மஸ்

நமது சரீரமும் அதன் உறுப்புகளும் அவயவங்களும் தேவனுக்கென்று பரிசுத்தமாகக் காக்கப்படவேண்டுமானால் நமது உள்ளமும் பரிசுத்தமாக வேண்டும். ஆசை இச்சை அடங்காத்தன்மை யாவும் இருதயத்திலிருந்துதானே விளைகிறது. சரீர ரீதியாக மாத்திரமல்ல, ஆவிக்குரிய ரீதியிலும் தேவன் நம் ஒவ்வொருவருடைய இருதயத்தையும் தேவனுக்கென்று பிள்ளைகளைச் சுமக்கும் கர்ப்பப்பையாகக் கேட்கிறார். நாம் இன்று எத்தனைபேரை நமது இருதயத்திலே சுமந்து, அவர்களுடைய மீட்புக்காகப் பாரத்தோடு ஜெபிக்கிறோம். கவனித்துப் பாருங்கள். ஜெபம் என்றால் அங்கே பெண்கள்தான் அதிகமாகக் கூடுவார்கள். ஊழியம் என்று சொல்லி அநேக பெண்கள் இன்று தேவனுடைய வயலிலே வேலையில் காணப்படுகிறார்கள். இவை நல்லது. வெளிப்படையான நமது காரியங்கள் தேவனுக்குப் பிரியமாய் இருக்கவேண்டுமானால் நமது உள் இருதயம் தேவனுக்கென்று வேறுபிரிக்கப்படவேண்டும். கிறிஸ்மஸ் தினத்தைக் குறித்த நமது சிந்தனை மாற வேண்டும். நம்மையே மாற்றிப்போட்ட கிறிஸ்து பிறந்த செய்தி நமக்குப் புதிய அர்த்தத்தைத் தரவேண்டும்.

நம்மைச் சுற்றிலும் வாழ்கின்ற ஒவ்வொருவரும் கிறிஸ்துவை அறியவேண்டும், மீட்புப் பெற்று மறுபடியும் பிறக்கவேண்டும் என்ற வாஞ்சை நமக்கு உண்டாயிருந்து, அதை நாம் செயல்படுத்துவோமானால் அதுவே நமக்கு கிறிஸ்மஸ் நாளைக் குறித்த புதிய அர்த்தத்தைத் தரும். தேவபயம், தாழ்மை, சிலுவை சுமக்கும் அர்ப்பணம் யாவும் நமது இருதயத்திலிருந்து உண்டாக வேண்டும். இந்த கிறிஸ்மஸ் நாட்களில் ஆகக்குறைந்தது ஒருவருக்காவது கிறிஸ்மஸ் செய்தியைச் சொல்லி, அவரை நம் இருதயத்திலே கர்ப்பந்தரித்து, வாஞ்சையோடு ஜெபித்து, அவரை ஆண்டவரண்டைக்கும் அவர் அளிக்கும் பாவ மன்னிப்பாகிய அன்பின் ஈவுக்கும் வழி நடத்துவோமானால் அதுதான் நமக்கு உண்மையான கிறிஸ்மஸ். அன்று மரியாள் வயிற்றில் கிறிஸ்து பிறந்தார்; இன்று உன் இருதயத்தில் ஒரு குழந்தை இயேசுவுக்காய் பிறக்குமானால், தேவன் உன்னிலே அந்த மரியாளைக் காண்பார்.

இப் புதியவருடம், சகோதரி, உனக்கு ஒரு புதிய அர்த்தத்தைத் தரவேண்டுமென்று தேவனை வேண்டிக்கொள்கிறேன். இதை வாசிக்கின்ற என்னருமை சகோதரிகள் ஒவ்வொரும் உலகரீதியாகவும் அதாவது சரீர ரீதியாகவும், ஆவிக்குரிய வாழ்விலும் சமுதாயத்திலே ஒவ்வொரு மரியாள்களாகத் திகழ கிறிஸ்து இயேசுவின் இனிய நாமத்தில் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களிலும் மரியாளைக் காணும் ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் என் அன்பின் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள். ❑

## உண்மை

(இ.இ.வஷ்னி)

'நீயும் நானும்
உலக மகா பொய்யர்கள்!
மட்டுமல்ல மகா அயோக்கியர்கள்!
ஆனாலும் - நீயும்
நானும் - உண்மை மனதுடன்
இயேசுவிடம்
மன்னிப்பு கேட்டால் - அவர்
உண்மையாய் மன்னிப்பதற்கு
உத்தமராகவேயிருக்கிறார்!
ஆமாம்! - நாம்
தேவனிடம் அறிக்கையிட்டு
மனந் திருந்துவதில்
உண்மை இருந்தால்
அவரும்... நம்மை
மன்னிப்பது உறுதி!'

**(நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்) 1யோவான் 1:9**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொய் பேசுவது பிழையா?

- நீரியஸ் பெர்னான்டோ -

"மனிதன் தொடர்புகொள்ளும் ஒரு சிருஷ்டி" **(Man is a relational being)** என வென் க்ருடெம் **(Wayne Grudem)** என்ற இறையியலாளர் வர்ணிக்கிறார். மற்ற உயிரினங்களோடு ஒப்பிடும்போது கடவுள் சிருஷ்டிப்பின் சிகரமாகிய மனிதனுக்கு, ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளும்படியான ஒரு மேலான வளர்ச்சியடைந்த பேசும் ஆற்றலைக் கொடுத்துள்ளார். எனவே பேசும் ஆற்றலினால் மனிதன் தன்னை சிருஷ்டித்த கடவுளோடும், சகமனிதர்களோடும் தொடர்புகொள்ள ஏதுவாயிருக்கிறது. ஆனால் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் பாவத்தில் விழுந்து போனதற்கு, ஒரு பொய்யே காரணமாயிற்று.

ஆதாம் ஏவாள் இருவரும் கடவுள் சொன்னபடி "நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை சாப்பிடும் நாளிலே சாகவே சாவீர்கள்"(ஆதி.2:17) என்ற உண்மையை நம்பாமல், பொய்களின் தகப்பனாகிய சாத்தான் கூறிய "சாகவே சாவதில்லை" (ஆதி.3:4) என்ற பொய்யை நம்பியதாலேயே அவர்கள் பாவத்திற்கும் சாபத்திற்கும் உள்ளானார்கள். அதுவரை நன்மையை (உண்மையை) மட்டுமே அறிந்திருந்த மனிதன், அன்றிலிருந்து தீமையையும் (பொய்யையும்) அறிந்துகொண்டான். இதன் விளைவு மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே இருந்த செங்குத்து உறவும் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையேயிருந்த கிடை உறவும் பாதிக்கப்பட்டது. மனிதனின் பேச்சிலும் சக உறவுகளிலும் பொய் ஆளுகை செய்ய ஆரம்பித்தது.

பொதுவாக ஒரு மனிதன் இன்னுமொரு மனிதனோடு தொடர்புகொள்ளும்போதுதான் அறநெறிகளை மீறும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. ஒருமனிதன் பொய் பேசவேண்டுமானால் அதனை செவிமடுக்க இன்னுமொரு மனிதன் இருக்க வேண்டும். "ஆகவே மனித உறவுகளைவிட்டு பிரிந்து தனித்து வாழும் துறவு நிலையே **(Monastic)** தூய்மையான வாழ்வுக்கான வழி என மனித உறவுகளைவிட்டுப் பிரிந்து தனித்துவாழ அநேகர் முற்பட்டனர். அப்படியாக, "சிமியோன் ஸ்டைலைட்ஸ் **(Simeon Stylites)** என்பவர் (கி.பி.390-459) இந்த உலகத்தை (மனித உறவுகளை) விட்டுவிலகி இருப்பதால், பரிசுத்தமடைய முற்பட்ட கிறிஸ்தவ துறவிகளில் ஒருவர். அவர் 66 அடி உயரமுள்ள ஒரு ஸ்தம்பத்தின் உச்சியில் தட்டையான ஒரு மேடையை அமைத்து, தன் வாழ்நாளின் 37 வருடங்களை அதில் கழித்தார். சிமியோன் ஸ்டைலைட்ஸ் கடைபிடித்த அனுஷ்டானங்களுக்கும் (மனித உறவுகளை அறுத்துக் கொண்ட அவரது பரிசுத்த வாழ்க்கைமுறை) வேதாகமத்தின்படி தேவன் எதிர்பார்க்கிற பரிசுத்த ஜீவியத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது"

வேதாகமம் கூறும் பரிசுத்தம் என்பது மனித உறவுகளைவிட்டு பிரிந்து வாழும் பரிசுத்தமல்ல. மாறாக, மனிதனுடைய நாளாந்த உறவுகளுக்குள்ளே வெளிப்படுத்தப்பட வேண்டிய பண்பாகும். எனவேதான் கடவுள் மோசே மூலமாக கொடுத்த பத்துகட்டளைகளில் முதல் நான்கு கட்டளைகள் மனிதனுக்கும் கடவுளுக்குமுள்ள செங்குத்து உறவுக்கான கட்டளைகளாகவும் மிகுதி ஆறு கட்டளைகள் மனித உறவுகளுக்கான கட்டளைகளாகவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### கட்டளையின் நோக்கம்

. "பொய் சொல்லாதிருப்பாயாக" என தேவன் கொடுத்த கட்டளைகளின் நோக்கம், எல்லாவிதத்திலும் உண்மை (சத்தியம்) பாதுகாக்கப்படவேண்டு என்பதேயாகும். பொதுவாக இன்று சகல மனிதர்களும் குறிப்பாக விசுவாசிகளுங்கூட அதிகமாக அல்லது அடிக்கடி மீறுகின்ற ஒரு கற்பனை, இந்த "பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக" என்ற ஒன்பதாவது கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் அது மிகையாகாது. நாம் வாழும் இந்த சமுதாயம் உண்மை, நேர்மை, கண்ணியம் என்பன குறைந்து போனதும் பொய்யினால் நிறைந்ததுமான ஒரு சமுதாயமாக காணப்படுவதுதே அதற்குக் காரணமாகும். இன்று பொய் பேசாவிட்டால் சமுதாயத்தில் வாழவே முடியாது என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். அரசியல்வாதிமுதல் ஆன்மீகவாதி வரை பொய்யானது புரையோடிப்போயிருக்கிறது. "பொய் பேசுவது இன்றைய இலங்கை மக்களின் ஒரு தேசிய பாவமாக இருக்கிறது" என அஜித் பெர்னாட்டோ அவர்கள் ஒரு பிரசங்கத்திலே குறிப்பிட்டார். பாவ அசுத்தம் நிறைந்த இந்த சமுதாயத்திலே தம்மை ஆராதிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம், தங்கள் மற்றவர்களோடு கொள்ளும் உறவிலும் வார்த்தையிலும் உண்மையை காத்துக்கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய எதிர்பார்ப்பு.

**கற்பனையின் விளக்கம்**

"பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக" என்ற கட்டளை கொடுக்கப்பட்டதன் காரணம், ஒருபோதும், "பொய் வளர்ந்து பெருக தேவமக்கள் இடமளிக்கக் கூடாது" என்பதற்காகதான். நாம் என்னென்ன காரியங்களில் பொய்யைத் தவிர்க்க வேண்டும் என்பது குறித்து யாத்திராகமம் 23ம் அதிகாரத்தில் நான்கு விதமான காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறன.

**1) பொய் வதந்திகளை பரப்பக்கூடாது (யாத். 23:1)**

நமது தமிழ் வேதாகமத்திலே, "அபாண்டமான சொல்லை ஏற்றுக்கொள்ளாயாக" என எழுதப்பட்டிருக்கிறது. ஆனாலும் புதிய மொழிபெயர்ப்பில் "பொய்யான வதந்தியை பரப்பவேண்டாம், அநியாயமாய் பொய் சாட்சியாகி, கொடியவனுக்கு உதவிசெய்ய வேண்டாம்" என்ற அர்த்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது. (IBS இலகு தமிழ் பொழிபெயர்ப்பு, மற்றும் திருவிவிலிய பொது மொழிபெயர்ப்பு) நமது சமுதாயத்தில் ஒருவரை பற்றி மற்றவரிடம் அவதூறாகப் பேசி, வதந்திகளை பரப்பித் திரிவதை பாவம் என அநேகர் சிந்திப்பதில்லை. இன்று திருச்சபைக்குள்ளும் இந்த பாவம் பெருகிவிட்டது. சிலர் ஜெபக்குறிப்பு என்ற போர்வையில் மற்றவர்களது அந்தரங்க விடயங்களையும், ஆதாரமற்ற பொய்களையும் கூறித்திரிவார்கள். இன்னும் சிலர் மற்றவர்கள்மேல் தாம் கரிசனை கொண்டுள்ளதாகவும் அவரது நலனில் அக்கறை கொண்டுள்ளதாகவும் எண்ணி அவர் இல்லாதபோது அவரைக் குறித்து மற்றவர்களுடன் கலந்துரையாடல் நடத்துவார்கள். இதுவும் தவறு. ஒருவருடைய தவறைப் பற்றி நாம் அறிய வந்தால், முதலாவதாக நாம் நமது தனிப்பட்ட ஜெபத்தில் அவருக்காக ஜெபிக்கவேண்டும். இரண்டாவதாக நாம் அவரிடம் நேரடியாகச்சென்று அவரது தவறை அந்தரங்கத்தில் சுட்டிக்காட்டவேண்டும். அப்படி முடியாவிட்டால் அவரை சரியான விதத்தில் வழிநடத்தக்கூடிய அவரது பெற்றோர், போதகர், அல்லது அவரது ஆவிக்குரிய தலைவரிடம் பக்குவமாக எடுத்துக்கூறலாம். ஆனால் இவை அனைத்தையும் சரியான நோக்குடனும் அன்புடனும் செய்யவேண்டியது மிக முக்கியமாகும். எனவே நமக்கு பிடிக்காத ஒருவரை பற்றி இன்னுமொருவருக்கு அபாண்டமாய் கூறித்திரிவது தேவன் வெறுக்கும் பாவமாகும். லேவி.19:16 ல் "உன் ஜனங்களுக்குள்ளே அங்கும் இங்கும் கோள் சொல்லித்திரியாயாக" என தேவன் எச்சரித்துள்ளார்.

**2) சனக்கூட்டத்தை சார்ந்து நீதியை புரட்டக்கூடாது (யாத். 23:2)**

உண்மை எது என தெரிந்திருந்தும் பெரும்பான்மையான மக்கள் ஆமோதிக்கும் பொய்யை உண்மையென ஏற்றுக்கொள்ளும் தவறுக்கு தேவனின் மக்கள் ஒருபோதும் உடன்படவேகூடாது. இன்று அரசியலில் மட்டுமன்றி திருச்சபைகளிலும்கூட பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தினால் பொய்யானது, மெய் என திரிபுப்படுத்தப்பட்டுவிடுகிறது. ஆனால் தேவனின் பிள்ளைகள் எப்போதும் உண்மைக்காக உறுதியாக நிற்பார்கள். ஏனெனில், பெரும்பான்மையினர் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதற்காக தேவன் தமது நியமங்களை மாற்றிக் கொள்கிறவர் அல்ல. சிலவேளை ஒரு தனி மனிதனாக உண்மையை பேசுவதும் சத்தியத்திற்காக எழுந்து குரல்கொடுப்பது கடினமான செயலாக நமக்குத் தோன்றலாம். ஆனால் "நாம் தனித்திருந்தாலும் தேவனோடு இணைந்து செய்யும் எந்தவொரு காரியமும் பெரும்பான்மை பலமிக்கது" என ஒரு தேவ பக்தன் கூறியிருக்கிறார்.

**3) ஏழை என்பதற்காக பட்சபாதமாய் நியாயத்தைப் புரட்டக்கூடாது. (யாத்.23:3)**

ஒரு நியாய விசாரணையிலே ஏழை-பணக்காரன் என்றோ, நண்பன்-பகைவன் என்றோ, உறவுக்காரன்-வேற்று இனத்தான் என்றோ ஒருபோதும் ஒரு தலைபட்சமாய் பொய்சாட்சி கூறவோ நமக்குத் தெரிந்த உண்மையை மறைக்கவோ முற்படக்கூடாது. பொதுவாக நமக்கு வேண்டிய ஒருவர் தவறு செய்தால் அந்த தவறுக்கு சாக்குப்போக்கு சொல்லி, "இந்த காரணத்தினால்தான் அவர் அப்படி நடந்துகொண்டார்" என அவர் செய்த தவறுக்கு நியாயம் கற்பிப்பதும். நமக்கு வேண்டாத ஒருவர் நன்மை செய்தாலும்,"அவர் நன்மை செய்ததற்கு பின்னணியில், அவருக்கு ஏதோ ஒரு உள்நோக்கம் இருக்கவேண்டும்" என அவர் செய்த நன்மைக்கு களங்கம் கற்பிப்பதும் இன்று சர்வசாதாரணமாகிவிட்டது. ஆனால் தேவனுடைய மக்கள் பட்சபாதமாய் நியாயத்தை புரட்டாதபடிக்கு எப்போதும் நியாயத்தின் பக்கமாய் சார்ந்து உண்மைக்காக செயல்படுகிறவர்களாய் இருக்கவேண்டும். இதைக்குறித்து "பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ்செய்து, மீறினவர்கள் என்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்" என்று யாக்கோபு 2:9ல் எழுதுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4) இலஞ்சத்துக்காக வார்த்தையை புரட்டக்கூடாது (யாத்.23:8)**

இலஞ்சம் கொடுத்து பொய்யையும் மெய் என புரட்டும் இந்த சமுதாயத்திலே தேவமக்கள் பணத்துக்காக வார்த்தையை புரட்டுகிறவர்களாயிருக்கக் கூடாது. இன்று பணத்துக்காக மட்டுமன்றி உயர் பதவிகளையும், அந்தஸ்தையும் பெற்றுக்கொள்ளவும் அதை தக்கவைத்துக்கொள்ளவும் வேலைஸ்தலங்களிலும் அரசியலிலும் ஏன் திருச்சபைகளிலும்கூட, தாம் சொன்னதை சொல்லவில்லை என்றும் சொல்லாததை சொன்னதாகவும் கூறி வார்த்தையை புரட்டுகிறவர்கள் உண்டு. ஆனால் பொய்யை வெறுக்கும் தேவன், எந்த காரணத்திற்காகவும் பொய்யை அனுமதிப்பதில்லை. "உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" என்பதே தேவனுடைய நியமமாக இருக்கிறது(லேவி.19:2)

**ஒரு நன்மைக்காக பொய் பேசலாமா?**

எல்லா சூழ்நிலையிலும் "உண்மை" பாதுகாக்கப்படவேண்டும் என எதிர்பார்ப்புடன் தேவன் தமது ஜனத்திற்கு ஒரு கட்டளையைக் கொடுத்திருக்க, சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் "பொய் பேசலாம்" என கூறுகிறவர்கள் உண்டு. ஒரு மனிதனுடைய உயிருக்கு ஆபத்து நேரிடலாம் என்ற நிலை ஏற்படும்போது ஒரு உயிரை காப்பாற்றும்படி பொய் சொல்லலாம் என வாதிடுகிறவர்கள் உண்டு. இதற்கு ஆதாரமாக யாத்திராகமம் 1ம் அதிகாரத்தில், "ராஜ கட்டளையை மீறி எபிரேய ஆண்பிள்ளைகளை உயிரோடு காப்பாற்றி, பொய் கூறிய இரு மருத்துவச்சிகளை தேவன் ஆசீர்வதித்தாரே" என அச்சம்பவத்தை உதாரணமாகக் காட்டுவார்கள். ஆனால் அப்பகுதியை வாசிக்கும்போது அங்கே அவர்கள் பொய் சொன்னார்கள் என்பதற்கு ஆதாரமே இல்லை. அவர்கள் ராஜாவுக்கு கூறியபடி, அவர்கள் போகும் முன்பே எபிரேய ஸ்திரீகள் பிரசவித்திருக்கலாம் அல்லது மருத்துவச்சிகள் வேண்டுமென்றே குழந்தைகளைக் கொலை செய்யும் சந்தர்ப்பத்தை தவிர்க்கும்படி காலம் தாமதித்து பிரசவம் நேரிட்டபின் ஸ்தலத்திற்கு சென்றிருக்கலாம். எனவே மருத்துவச்சிகள் பொய் கூறினார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. அப்படி அவர்கள் ராஜாவுக்கு பொய்யே கூறியிருந்தாலும் தேவன் அவர்களது பொய்யை ஆதரிக்கிற தேவன் அல்ல. அந்த பொய்யை கொண்டு அந்த பிள்ளைகளை காப்பாற்றவேண்டும் என்ற அவசியமும் அவருக்கு இல்லை. ஏனெனில் தமது வல்லமையால் முழு இஸ்ரவேல் ஜனத்தையும் எகிப்தின் இராணுவத்தினரிடமிருந்து காப்பாற்றிய கர்த்தருக்கு இந்த சிறு குழந்தைகளை காப்பாற்ற இந்த மருத்துவச்சிகளின் "பொய்" அவசியமல்ல. உண்மையில் தேவன் மருத்துவச்சிகளை ஆசீர்வதித்ததின் காரணம் 'அவர்கள் தேவனுக்கு பயந்ததினால்' என யாத்திராகமம் 1:21 கூறுகிறது.

தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் "பொய் கூறலாம்" என்பதற்கு ஆதாரமாக இஸ்ரவேலின் இரு ஒற்றர்களை ஒளித்துவைத்து, பொய் சொன்ன ராகாப் என்ற பெண்ணின் சம்பவத்தையும் காரணம் காட்டுகிறவர்கள் உண்டு. (யோசுவா 2ம் அதிகாரம்) இந்த சம்பவத்தில் ராகாப் சொன்னது பொய் என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் அவள் சொன்ன பொய், சரி என்றோ அவள் சொன்ன பொய்யின் நிமித்தம் கர்த்தர் அவளை இரட்சித்தார் என்றோ எங்கும் சொல்லப்படவில்லை. உண்மையில் அவள் கர்த்தரின் வல்லமையை அறிந்திருந்தாள்(யோசு.2:9-10). "கர்த்தர் ஒருவரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்" என்ற தனது விசுவாசத்தை அறிக்கையிட்டாள், (யோசு.2:11) தனது விசுவாசத்தின் அடையாளமாக, தன்னிடம் வந்த இஸ்ரவேல் ஒற்றர்களை ஏற்றுக் கொண்டாள். இறுதியாக தன்னால் இயலாத சூழ்நிலையில் ஒரு பொய்யைக் கூறி அந்த இரு ஒற்றர்களையும் காப்பாற்ற எண்ணினாள். ஆனால் கர்த்தர் ராகாப்பை இரட்சித்தது அவளது கிரியையின் நிமித்தமல்ல. மாறாக, அவளது விசுவாசத்தின் நிமித்தமே. அதனால் தான் அவளது பெயர், விசுவாசவீரர்களின் பெயர்பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது(எபி.12:31).எனவே இங்கும் கூட இராணுவ பலத்தால் அன்றி தமது சொந்த வல்லமையினால் எரிகோவின் மதில்களை விழச்செய்த கர்த்தருக்கு, இஸ்ரவேல் புத்திரரின் இருவரைக் காப்பாற்ற ராகாப்பின் பொய் அவசியமல்ல. நம்முடைய கர்த்தர் எந்த சூழ்நிலையிலும் பொய்யை ஆதரிக்கிறவரும் அல்ல. ஒரு பொய்யைக் கொண்டு மனிதனை காப்பாற்றவேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை.

**உண்மையை மிகைப்படுத்தி அல்லது திரித்து கூறலாமா?**

சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஒரு உண்மையை திரித்து, மிகைப்படுத்திக் கூறுவது தவறல்ல என வாதிடுகிறவர்கள் உண்டு. இந்த விடயத்தில் ஒன்றை நாம் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும். உண்மைகளை மறைத்து, அப்பட்டமாக பொய் பேசுவதும், ஒன்றை பொய்யாக மிகைப்படுத்தி, அல்லது உண்மையை திரித்து கூறுவதும் பாவமே. பொதுவாக இன்று சபைகளில் அல்லது ஸ்தாபனங்களில் அறிக்கைகள் சமர்ப்பிக்கும்போது, ஒரு நிகழ்வில் சரியாக 954 பேர் கலந்துகொண்டிருக்க, "ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்" என அறிக்கையில் மிகைப்படுத்தி கூறுவது பொய்யாகும். அதேபோல இன்று பல பிரசங்கிமார் பிரசங்கமேடைகளில் நடக்காததை நடந்த சம்பவமாக கூறுவதும், நடந்த சம்பவத்தை உதாரணமாகக் குறிப்பிடும்போது, அச் சம்பவத்தை சுவாரஸ்யமாக்குவதற்காக பொய்யை சேர்த்து, மிகைப்படுத்திக் கூறுவதும் பொய்யே. "சத்தியத்தை பிரசங்கிக்க வேண்டிய பரிசுத்த பீடத்தை பொய்யின் இடமாக மாற்றக்கூடாது. அப்படி வாய் தவறி பொய்யான தகவலை சொல்லிவிட்டால் உடனடியாக அந்த இடத்திலேயே சபையாரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கூறி, சரிசெய்து உண்மையை மட்டும் பேச வேண்டும். இப்படி செய்யும்போது நாம் பிரசங்கபீடத்தில் பொய் பேசுவதையும் உண்மையை மிகைப்படுத்திக் கூறுவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்"

**பாதி உண்மையை மறைத்து பேசுதல்**

பொய் பேசாமல் வியாபாரம்செய்ய முடியாதே? எனவே ஒரு கிறிஸ்தவன் எப்படி வியாபாரத்தில் ஈடுபடுவது? என கேட்கிறவர்கள் உண்டு. கிறிஸ்தவர்கள் வியாபாரத்தில் ஈடுபடும்போது பொய்சொல்ல தூண்டப்படும் அநேக சந்தர்ப்பங்கள் ஏற்படும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் நியாயமான ஒரு வியாபாரத்தில் ஈடுபடுவதில் எவ்வித தவறுமில்லை. ஆனால் வியாபாரத்தில் அப்பட்டமாய் பொய் பேசும் சூழ்நிலை ஏற்படுமாயின் ஒன்றில் பொய் பேசுவதை தவிர்க்கவேண்டும் அல்லது அந்த வியாபாரத்தை தவிர்க்கவேண்டும். அதேவேளை வியாபாரத்தில் முழு உண்மையையும் சொல்லவேண்டும் என்ற கட்டாயமில்லை. வியாபாரத்தில் நமக்கே உரிய சில தனிப்பட்ட இரகசியங்கள் நமக்கிருக்கலாம். உதாரணத்திற்கு ஒரு பொருளை நாம் எப்படி தயாரிக்கிறோம்? எங்கே வாங்கினோம்? என்ன விலைக்கு வாங்கினோம்? போன்ற உண்மைகளை வாடிக்கையாளருக்கு சொல்லவேண்டிய அவசியமில்லை. எனவே "வியாபாரத்தில் நாம் எல்லா உண்மையையும் சொல்லவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் நாம் சொல்வது எல்லாம் உண்மையாக இருக்கவேண்டும்" என பிரேம் குமார் அவர்கள், கிறிஸ்தவனும் தொழிலும் என்ற புத்தகத்தில், தாம் எங்கோ வாசித்ததை குறிப்பிடுகிறார்.

அதேபோல ஒருவர் தான் இரட்சிக்கப்படும்முன் ஒழுக்கத்தில் தவறியிருந்தால் இரட்சிக்கபட்டு திருமண முடிக்கும்போது தன் துணைக்கு தனது கடந்தகால தவறுகள் உறவுகள் தொடர்புகள் அனைத்தையும் கூற வேண்டுமா? அல்லது அந்த உண்மைகளை மறைக்கலாமா? என்பதும் பலரது கேள்வி. என்னைப் பொருத்தளவில் ஒருவர் இரட்சிக்கப்பட்டிருந்தால் அவர் "கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாய் இருக்கிறார். பழையவை ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17) என் பரிசுத்தவேதம் கூறுவதால், தனது வாழ்வில் இரட்சிக்கப்படும்முன் நிகழ்ந்த தவறுகள் அனைத்தையும் தன் வாழ்க்கை துணையிடம் சொல்ல வேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அவர் உண்மையை மறைத்து பேச முற்படக்கூடாது. அதேவேளை அவரது வாழ்க்கைத் துணையாக அமைந்தவர் உண்மையில் இரட்சிக்கப்பட்ட ஒரு நபராக இருந்தால், கடவுள் மன்னித்த தன்னுடைய துணையின் கடந்தகால தவறுகளை அறிந்துகொள்ள ஆவல்கொள்ளமாட்டார்.எனவே இங்கும் கூட ஒருவர் வலிந்து சென்று தனது கடந்த கால தவறுகள் அனைத்தையும் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அதேவேளை அவர் சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கவேண்டும்.

**சத்தியம் பண்ணுதல்**

பொதுவாக நீதிமன்றத்தில் சாட்சி சொல்லும் முன்பாக, சாட்சி கூறுகிறவர் "நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையை தவிர வேறெதும் இல்லை" எனக் கூறி தனது மதத்தின் புனித நூலில் அடித்து சத்தியம் செய்யவேண்டும். அவர் கூறுவது அனைத்தும் உண்மையாக இருந்தால் பின்னே அவர் ஏன் சத்தியம் செய்ய வேண்டும்? பொய் நிறைந்த சமுதாயத்தில், எது பொய் எது மெய் என வித்தியாசம் தெரியாததால், தான் பேசுவது உண்மை என்பதை நிருபிக்க "சத்தியம் பண்ணுதலை" மனிதன் தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்டான். இது தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றல்ல. எந்த சூழ்நிலையிலும் சத்தியம்பண்ணுதலை தேவன் வெறுக்கிறார்(லேவி.19:12). நாம் எப்போதுமே "உள்ளதை உள்ளதென்றும் இல்லாததை இல்லை என்றும் கூறவேண்டும்" என்பதே தேவனுடைய எதிர்பார்ப்பு. அதற்கு "மிஞ்சினது (பொய்யானதாக) தீமையினால் உண்டாயிருக்கும்" என இயேசு போதித்தார்(மத்.5:37).

கடைசியாக, ஆயிரம் பொய்யை சொல்லியாவது ஒரு கல்யாணத்தை நடத்திவைக்கலாம் அதில் தவறு இல்லை என நமது கலாச்சாரம் கற்பிக்கிறது. ஆனால் எந்த காரணத்தைக் கொண்டும் பொய் பேசக் கூடாது, உண்மை பாதுகாக்கப்படவேண்டும் என்பதே தேவனுடைய எதிர்பார்ப்பு. ஆனால் மனிதன் பிறக்கும் போதே பாவ சுபாவமுள்ளவனாக பிறப்பதாலும், பொய் பேசும் ஒரு கலாச்சாரத்தில் வளர்வதாலும், அவன் சிறு வயதிலேயே பொய் பேசும் கலையைக் கற்றுக்கொள்கிறான். அப்படி சிறுவயதில் பொய்பேசி வளரும் பிள்ளை, பெரியவனானதும் எதற்கெடுத்தாலும் வாய் கூசாமல், பொய்பேசும் கலையில் தேர்ச்சி பெற்றுவிடுகின்றது. ஆனால் தேவனுடைய நியமம், மனிதன் எந்த சந்தர்ப்பத்திலும் உண்மையை காத்துக் கொள்ளவேண்டும் என போதிக்கிறது. ஒரு மனிதன் நியாயப்பிரமாணத்தின் படி எப்போதும் உண்மையே பேச தீர்மானிப்பானாகில் அது ஒருபோதும் முடியாத ஒன்றாகவே இருக்கும். ஆனால் கிருபையினாலே தேவனுடைய ஆளுகைக்கு ஒருவன் தன்னை அர்ப்பணித்து வாழ்வானாகில், சத்திய பரராயிருக்கும் இயேசுகிறிஸ்து அவனுக்குள் வாசமாயிருந்து அவனது பேச்சையும் நடத்தையையும் சத்தியத்தின் வழியிலே நடத்துவார். ஆகவே, தேவனால் வேறு பிரிக்கப்பட்ட ஜனம் ஒருவேளை கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அனுபவிக்க நேரிட்டாலும், எல்லா சூழ்நிலைகளிலும் உண்மையை மாத்திரமே பேசி, இந்த பாவமான உலகத்திலே உப்பாகவும் ஒளியாகவும் திகழவேண்டும் என்பது தேவனுடைய எதிர்பார்ப்பாய் இருக்கிறது.

**"...பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்"**

**(எபேசியர் 4:25)** ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலைஸ்தலத்தில் கிறிஸ்தவன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

- ஆ. பிரேம்குமார் -

இன்று தொழிற்துறைகளில் இருக்கும் அதிகமானோர் தொழிலில் திருப்தியற்றவர்களாக துக்கத்தோடும், தொழிலை மாம்சத்தின் முள்ளைப்போலவும் எண்ணுகின்றனர். தொழில் புரிபவர்களுக்கென ஒரு வினாப் பத்திரம் தயாரித்து பலரிடம் பொருத்தமானதைப் புள்ளி இடும்படி கூறினேன். அதில் 'நீங்கள் செய்யும் தொழிலில் திருப்தியாயிருக்கிறீர்களா?' என ஒரு கேள்வி கேட்டிருந்தேன். அதற்கு அவர்கள் கொடுக்கும் பதிலையும், அப்பதிலுக்கான காரணத்தையும் கேட்டு சில மாதிரி விடைகளையும் தயாரித்துக் கொடுத்திருந்தேன். அத்துடன் அந்த மாதிரி விடைகளுக்கு மேலதிகமாக, வேறு ஏதும் காரணங்கள் இருப்பின் அதையும் எழுதுவதற்கு இடமளித்திருந்தேன். அதன்படி தம் தொழிலில் திருப்தி கண்டவர்கள் கொடுத்த காரணங்களும், தமது தொழிலில் திருப்தி காணாதவர்கள் கொடுத்த காரணங்களும், மேலும் நான் புத்தகங்களில் கற்றதும், அனுபவத்தில் கண்டதும், கேட்டதும், நம்புகிறதுமான காரியங்களே இந்த அதிகாரத்திற்கான ஆதாரமாகும். ஒருவருக்கு அவருடைய தொழில் திருப்தியில்லாமலிருப்பதற்கு காரணம் என்ன? தொழிற் திருப்தியின் இரகசியமென்ன? இத்தகைய தொழிற் திருப்தியற்ற நிலைக்குப் பரிகாரமென்ன? என இங்கு அவதானிப்போம்.

**1. பொருத்தமற்ற தொழிலில் இருத்தல்**

ஒரே தொழிலைச் செய்யும் இருவரில் ஒருவர் தொழிற் திருப்தியுடையவராகவும், இன்னொருவர் தொழிற் திருப்தியற்றவராயும் இருப்பதை ஒருவேளை நீங்கள் அவதானித்திருக்கலாம். ஒருவருக்கு அழைப்பாயிருக்கும் ஒரு தொழில் இன்னொருவருக்கு அழைப்பு அற்றதாயிருக்கலாம். ஒருவருக்கு விற்பனைத்துறையில் அங்குமிங்கும் திரிந்து வியாபாரம் செய்வது ஆர்வமென்றால், ஆற்றலென்றால், அவர் கணக்காளராக வேலைசெய்தால் அவருக்குத் திருப்தி கிடைக்காது. சிலர் அமைதியான ஆள்தன்மை கொண்டவர்கள், ஓரிடத்திலிருந்து ஒரே காரியத்தைச் செய்ய விரும்புவர். அவர்களுக்கு புதிய சவால்களைச் சந்திக்க விருப்பம் இருக்காது. இன்னும் சிலருக்கு ஒரே காரியத்தைச் செய்வதில் அலுப்பு தட்டிவிடும். இவர்கள் புதிய சவால்களை ஏற்று, சவால்கள் நிறைந்த காரியங்களை எத்தனிக்க விரும்புவர்.

எமது அழைப்பு எமது ஆள்தன்மை, தாலந்துகள், தகமை, விருப்பங்கள் என்பவற்றிற்குமிடையிலான தொடர்புபற்றியும், எமது அழைப்பை அறிந்துகொள்வது பற்றியும் நாம் ஏற்கனவே அவதானித்ததின் அடிப்படையில் நாம் செய்யும் தொழிலை மீளாய்வு செய்துப் பார்ப்பது, நாம் சரியான இடத்தில் இருக்கிறோமா? என்பதை அறிய உதவும். ஆனால் தமது அழைப்பை அறிந்தும், அழைப்புக்குப் புறமுதுகு காட்டி பணத்தின் பின்னாலும் பதவியின் பின்னாலும் ஓடுகிறவர்கள் இல்லை என்று சொல்வதற்கில்லை. ஆண்டவரின் வார்த்தைக்கும் அதன் கோட்பாடுகளுக்கும் முரண்படும் தொழிலில் ஒரு கிறிஸ்தவன் இருப்பானானல், (உதாரணமாக, சிகரட் கம்பனியொன்றில் வேலைசெய்வது) ஆண்டவரின் வார்த்தைகளுக்கு முரணாக இருப்பின், அவனுக்கு சுத்த மனசாட்சியோடுகூடிய தொழிற்திருப்தி கிடைக்காது. அதுபோல சரியான நிறுவனத்தில் பொருத்தமற்ற பதவியில் இருந்தாலும் தொழிற் திருப்தி கிடைக்காது. சரியான இடத்தில், சரியான நபராக, சரியான நேரத்தில் இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திறமையை வெளிப்படுத்த வாய்ப்பற்றிருத்தல்

ஆண்டவர் எமக்கு இயற்கையாகக் கொடுத்துள்ள தாலந்துகள், திறமைகள், தகமைகள் விருப்பங்கள் என்பவற்றை பயன்படுத்தவும் வளப்படுத்தவும் விருத்தி செய்யவும் வாய்ப்பில்லாவிட்டால் திருப்தியிராது. **Studs Terkel** என்பவர் தான் எழுதும் ஒரு புத்தகத்திற்காக தொழிலாளி ஒருவரை பேட்டி கண்டார். அந்த தொழிலாளியின் பதில் இவ்விதமாக அமைந்தது. "நம்மில் அநேகருக்கு நாம் செய்யும் தொழில் மிகச்சிறியதாய் இருக்கிறது, எமக்கு ஏற்ற பெரிய தொழில் இல்லாதிருக்கிறது என நான் நினைக்கிறேன்" உண்மையில் அவர் கூறும் காரியம், நாம் செய்யும் தொழிலில் அநேகமானவை எமக்கு செய்யக்கூடிய அளவைவிட குறைவானவை. எமது திறமைகளை உச்சஅளவில் வெளிப்படுத்த முடியாதபடி கட்டுப்படுத்து பவை. எம்மால் செய்யக் கூடியதை செய்வதற்கு இடமளிக்காதவை. எனவே பலர் திருப்தியற்ற நிலையில் இருக்கின்றனர். மறுபுறத்தில் எல்லை விஸ்தாரமா யிருந்து எமது திறமைகள் உச்ச அளவில் பயன்பட வாய்ப்புகள் இருக்கும்போதுதான் தொழிலில் திருப்தி கிட்டும். பில் ஹயிபல்ஸ் என்பவர் தொழிலில் திருப்தியுள்ள ஊழியர்களைக் குறித்துக் கூறுகையில், "அநேகமாக தங்களது வேலையில் திருப்தியை அனுபவிக்கும் ஊழியர்களிடம் நாம் காணக்கூடிய பொது அம்சம் என்னவென்றால், அவர்கள் தங்களை ஊக்கப்படுத்துகிறதும் **(Motivated)** தங்களுக்கு ஆற்றல் உள்ளதுமான துறைகளில் வேலை செய்பவர்களாக இருப்பதுடன், அவர்கள் செய்யும் வேலை தேவன் அவர்களுக்குத் கொடுத்துள்ள விருப்பங்கள், திறமை கள், தாலந்துகள் என்பவற்றோடு இசைந்ததாயும் இருக்கும்" என்று கூறுகின்றார்.

எம்மால் செய்யக் கூடியதிலும் மிகக் குறைந்தளவு வேலை எமக்கிருந்தால் அலுப்புத் தட்டிவிடும். எம்மால் செய்யக்கூடியதிலும் அதிகமிருந்தால் அழுத்தம் அதிகரித்துவிடும். தொழில்புரிபவர்களுக்கென நான் கொடுத்த வினாப்பத்திரத்தில் தொழிற் திருப்தியுள்ள பலர் குறிப்பிட்ட காரணங்களில் முக்கியமான ஒன்று, தங்கள் திறமைகள் தாலந்துகளை உச்ச அளவில் பயன்படுத்த வாய்ப்பு மிகக் குறுகியது, தமது தாலந்துகளை திறமைகளை உச்சஅளவில் பயன் படுத்த வாய்ப்பில்லை என்பதாக பலர் பதிலளித்தனர். ஆண்டவர் எமக்குக் கொடுத்துள்ள தாலந்துகள், திறமைகள், விருப்பங்கள் என்பனவற்றை உச்சஅளவில் பயன்படுத்த எமக்கு வாய்ப்பளிக்கப்படவேண்டும். என்ன தான் திறமையிருந்தாலும் அதனை வெளிப்படுத்த வாய்ப்புகள் இல்லாவிட்டால், அத் திறமை பயனற்றதாகி விடுமே. சந்தைப்படுத்தல் துறையில் **(Marketing)** ஆர்வ மும் திறமையுமுள்ள ஒருவனை கணக்கெழுதும்படி உட்கார வைத்தால் அவனால் திருப்தி காணமுடியாது. எமக்குள் விதையாகப் பொதிந்துள்ள திறமைகள், தகமைகள் விருட்சமாக விஸ்வரூபமெடுக்க வாய்ப்புகள் வேண்டும். எம் திறமைகள், தகமைகள் அனுபவம் என்பவற்றையும் நாம் செய்யும் வேலையின் எல்லை யையும் விருத்தி செய்ய விஸ்தரிக்க, சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும்.

## 3. எம் தேவைகள் சந்திக்கப்படாதிருக்கும்போது

வினாத்தாளில், திருப்தியற்ற நிலைக்குக் காரணம் 'சம்பளம் போதாது' என்றும் பலர் குறிப்பிட்டிருந்தனர். என்னதான் மாடாய் உழைத்தாலும் என் வேலையை அங்கீகரிக்கிறார்களில்லை. என் பங்களிப்பை பெறுமதி வாய்ந்ததாகக் கருதுகிறார்களில்லை. பாராட்டு கிடைப் பதும் அரிது. ஏச்சும் பேச்சுமோ ஏராளம். இது பலரது ஆதங்கத்தின் வெளிப்பாடு. சம்பளம் மட்டும் ஒருவனுக் குத் தொழிற் திருப்தியைக் கொடுக்குமென நான் நம்ப வில்லை. பெரிதான சம்பளமிருந்தும் தம் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பு அற்று, திருப்தியற்ற நிலையை சம்பளத்தினால் சமாதானம் செய்து கொண்டிருப்பவர் களும் உண்டு. எது எப்படியிருந்தாலும் தொழிற் திருப்தியில் சம்பளமும் ஒரு பங்கு வகிக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஒருவனுக்கு அவனது தேவைக ளைச் சந்திக்கவும், சிறிது சேமிக்கவும் போதிய சம்பளம் அவசியம். மனிதர்களுடைய எண்ணற்ற தேவைகளும் ஆசைகளும் வாழ்க்கைச் செலவுகளும் அதிகரித்து வருவதால் எமக்கு அளவான சம்பளம் எவ்வளவு என்பதை அளவிட முடிவதில்லை. சம்பளம் அதிகரிக்க தேவைகளும் அதிகரிக்கிறது. எனவே சம்பளம் தொழிற் திருப்தியை அளவிட சிறந்த கருவியல்ல. ஆனாலும் அதற்கென விதிவிலக்குண்டு என்பதையும் மறுக்க இயலாது. சம்பளம் மட்டுமல்ல எமது ஏனைய தேவை களும் சந்திக்கப்படவேண்டும். நான் செய்யும் வேலை களை முக்கியமானதாக, முதலாளியும் ஏனையோரும் அங்கீகரிக்கவேண்டும். சரியான சூழ்நிலையில் எனது பங்களிப்பைப் பெறுமதி வாய்ந்ததாகக் கருதவேண்டும், என் வேலையைப் பாராட்டவேண்டும். அப்படி எமது சமூக தேவைகளான ஏற்ற சம்பளம், பாராட்டு, அங்கீ காரம், சமூக உறவு, நட்புறவு போன்றவை சந்திக்கப் படும்போது திருப்தி கிட்டும்.

## 4. எம் மனப்பான்மை தவறாயிருக்கும்போது

டுலோஸ் என்னும் கப்பலில் வேலை செய்த ஒருவருடைய சாட்சி என் நினைவுக்கு வருகிறது. சபை மேய்ப்பராயிருந்த அவர் அந்த கப்பல் குழுவில் ஒருவராகச் சேர்ந்தார். அவருக்கு வரவேற்பு மேசையில் **(Reception Counter)** வேலை கொடுத்தார்கள். ஆனால் அவருக்கு அங்குள்ள உணவு பிடிக்கவில்லை. அங்கு இருந்தவர்களைப் பிடிக்கவில்லை. சுருங்கக்கூறின் அங்கு எதுவுமே பிடிக்கவில்லை. சிறிது காலத்தின்பின் வீடு திரும்பினார். ஆனால் ஆண்டவர், திரும்பவும் அவரோடு இடைப்பட்டு அவரை மீண்டும் கப்பலுக்குப் போகுமாறு, கூறினாராம். அப்படி அவர் மீண்டும் போன போது அந்தமுறை அவருக்கு கப்பலில் உணவு பிடித்தது, உடனிருந்தவர்களைப் பிடித்தது, எல்லாம் பிடித்திருந்தது என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தொழிலைக் குறித்து கொண்டிருக்கும் மனப்பான்மை தொழிற் திருப்திக்கு பங்களிக்கிறது. ஆண்டவர் அழைத்த இடத்தில் இருந்தாலும், நாம் விரும்பும் பலவற்றைச் செய்தாலும், நாம் விரும்பாத (வேதத்திற்கு முரண்படாத) சில காரியங்களையும் செய்யவேண்டிவரும். வேலையில் எல்லாக் காரியங் களும் பரிபூரணமாயிராது. பல குறைகள் காணப்படும். இவற்றிற்கு மத்தியிலும் நாம் சரியான மனப்பான்மை கொண்டிருப்பது தொழிலில் திருப்தி காண உதவும். "இத் தொழிலை செய்யும்படி ஆண்டவர் என்னை அழைத்து உள்ளார். நான் அவரது ஸ்தானாதிபதியாக அவருக்கென்றே இவ்விடத்தில் உண்மையும் நேர்மையு மாக கடினமாக உழைக்கிறேன். எனக்குள்ள திறமை, தாலந்து, தகமைகளை நல்ல உக்கிராணக்காரனாக ஆண்டவருக்கென்று பயன்படுத்துகிறேன். ஆண்டவரே எனது இறுதி எஜமான். அவருக்கென்று நான் செய்யும் ஊழியத்திற்கு என் முதலாளி உரிய சன்மானம் வழங்கினாலும் வழங்காவிட்டாலும் எனக்கு ஆண்டவர் பலனளிப்பார். எனது வேலை, வார்த்தை, நடத்தை, மனப்பான்மை, உறவுமுறைகள் எல்லாவற்றிலும் அவரை மகிமைப்படுத்தவும் வெளிப்படுத்தவும் அழைக் கப்பட்டுள்ளேன்" என்ற சரியான மனப்பாங்கு தொழிற் திருப்திக்கு வழிவகுக்கும் காரணியாகும்.

இவற்றோடு, ஒத்தாசையாக அமையும் வேலைத் தளசூழல் **(Supportive working conditions)** ஒத்துழைக்கும் சகஊழியர்கள், நியாயமான பலன்கள், பெறுபேறுகள் **(Equitable rewards)** (உதாரணமாக சம்பளத்திட்டம், ஏனைய பலன்கள் என்பன ஒரேவித பதவிகளில் இருப்பவர்களுக்கு ஒரேவிதமாயிருத்தல்) என்பன தொழிற் திருப்திக்கு உதவும்.

தொழிலிலே திருப்தியற்ற நான் என்ன செய்வது, என்று நீங்கள் கேட்கலாம். சிலர் ஓரிடத்தில் ஒருசில மாதங்களிருந்து திருப்தியில்லை என்று கண்டவுடன் அடுத்த இடத்திற்குப் பாய்வார்கள். அங்கும் திருப்தி இல்லையென்று இடத்திற்கிடம் தாவுவார்கள். இப்படிப் பட்டவர்கள் ஒரே இடத்தில் தொடர்ச்சியாக இருந்து பழகுவது அவசியம். ஆனால் தொடர்ந்து பலவருடங்க ளாகத் திருப்தியற்ற நிலை காணப்படுமானால் அதன் காரணத்தை முதலில் கண்டறியவேண்டும். தொழில் ஒன்றைத் தெரிவு செய்வதுபற்றி (கடந்த வருடம் ஜனவரி - மார்ச் இதழில்) இரண்டாம் அதிகாரத்தில் நாம் கற்றதை திரும்ப வாசித்து, நீங்கள் ஆண்டவர் அழைத்த இடத்தில் இருக்கிறீர்களா என்பதையும், நீங்கள் செய்யும் தொழிலில் உங்கள் விருப்பங்கள் தாலந்துகள் திறமைகள் தேவைகளைத் திருப்தி செய்கிறதா என்றும் ஆராயுங்கள். உங்களுக்குப் பொருத்தமற்ற, தவறான பதவியில் இருப்பீர்களானால் ஜெபத்துடன் உயரதிகாரியிடம் போய் உங்களுக்குப் பொருத்தமான தொழில் எவ்வகையானது என்று கூறி அதே நிறுவனத்தில் உங்களுக்குப் பொருத்தமான பதவிக்கு மாறமுடியுமா என முயற்சிக்கலாம். அப்படி இல்லாவிட்டால் உங்களுக்குப் பொருத்தமான தொழில் கைகூடிவரும்படி ஜெபத்தோடு விண்ணப்பிக்கலாம்.

திருப்தியற்ற துறையில் அதிக காலம் இருப்பது உங்களுக்கும், நீங்கள் வேலை செய்யும் ஸ்தாபனத் திற்கும் நல்லதல்ல. அதேவேளை பொருத்தமான தொழில் கிடைப்பதற்குமுன்பு விலகிவிடவேண்டாம். ஆண்டவரின் சித்தத்திற்கு உங்களை ஒப்புக்கொடுத்து, ஆண்டவரின் வழிநடத்தலை நாடுங்கள். ஒருசிலரை உருவாக்கும்படி ஆண்டவர் ஒரு கடினமான சூழ்நிலை யில் அதிக காலம் வைத்திருக்கலாம் என்பதையும் நான் மறுக்கவில்லை. நீங்கள் செய்யும் தொழிலை முழு ஈடுபாட்டோடு செய்யுங்கள். உங்கள் திறமை தாலந்துகளை வளர்த்துக் கொள்ளுங்கள். "நீங்கள் செய்யும் காரியம், உங்கள் ஆள்தன்மையோடு இசைந்ததாயிருந்தால் நீங்கள் அநேகமாக நிறைவை யும் திருப்தியையும் அடைவீர்கள்" **(If what you do is in harmony with who you are, you will more likely be fulfilled).** □

## விசேஷ பாராட்டுக்கள்!!!


இம்முறை சத்தியவசன சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுதிய எழுத்தாளர்களையும் நிறை குறைகளை எழுதி தெரிவித்த வாசகர்களையும் சத்தியவசனம் உற்சாகப்படுத்த விரும்புகின்றது. நாங்கள் உங்கள் சேவையை பாராட்டுவதோடு, தொடர்ந்தும் உங்களுடைய உற்சாகமான கடிதங்களையும் தரமிக்க ஆக்கங்களையும் உங்களுடைய மேலான ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம். - ஆசிரியர்.

கடந்தமுறை சத்தியவசன சஞ்சிகையுடன் ஆக்கங்கள் மற்றும் நிறைகுறைகளை எழுதித் தெரிவித்தவர்களில் 1. திருமதி. ஜீவா அருளையா - லண்டன் 2. ஜெ.ஆர். நிரோஷி - கலஹா 3. கே.ஜே. தர்மலிங்கம் - மட்டக்களப்பு 4.டொரின் நைல்ஸ் - கிளிநொச்சி 5. ஸ்ரெபினி விஜயந்தன் - பிலிப்பைன்ஸ் 6. பிரியதர்ஷினி - ரம்பொடை 7. கவிஞர் கண்ணையா - வவுனியா 8. அற்புதமேரி - சிலாபம். 9. ராஜ்குமார் - கொழும்பு. 10. திருமதி. அமிர்தநாயகம் 11. மேரி டோசன் - லிந்துள்ள 12. நளினி - கண்டி 13. யோசுவா - வவுனியா 14. அச்சுதன் - யாழ்ப்பாணம். ஆகியோருக்கும் இன்னும் பெயர் குறிப்பிடாத ஏனைய வாசகர்களுக்கும் எமது விசேஷித்த பாராட்டுக்கள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி பதில்



**கே: அந்நிய பாஷை மட்டும்தான் அடையாளமா?**

ப: அந்நியபாஷை ஒன்றுதான் பரிசுத்தஆவியின் அபிஷேகத்திற்கு ஒரே அடையாளம் என்று பரிசுத்த வேதாகமத்தில் நேரடி போதனையோ உபதேசமோ இல்லை. ஆனால் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்ட மக்கள் அந்நியபாஷை பேசியதற்கு போதுமான உதாரணங்கள் உண்டு. பெந்தேகொஸ்தே அன்று பரிசுத்தஆவியைப் பெற்ற 120 சீடரும் "வெவ்வேறு பாஷைகளில் பேசத் துவங்கினார்கள்"(அப் 2:4). பரிசுத்தஆவியானவர் கொர்நேலியுவின் மீதும் அவன் வீட்டார் மீதும் இறங்கிய போது அவர்கள் "பல பாஷைகளில் பேசி தேவனைப் புகழ்ந்ததை" பேதுருவோடு வந்திருந்த யூத விசுவாசிகள் கேட்டனர்(அப் 10:45). எபேசுவிலிருந்த சீடர்மீது பவுல் கைகளை வைத்தபோது அவர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் வந்தார். அவர்கள் அந்நியபாஷையில் பேசி தீர்க்கதரிசனம் சொன்னார்கள்(அப் 19:6). பவுல் அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியினால் நிறைந்த அந்த வேளையில் அந்நியபாஷையில் பேசியதாக குறிப்பிடப்படாவிட்டாலும், பின்னர் கொரிந்தியருக்கு எழுதுகையில், "உங்களெல்லாரிலும் நான் அதிகமாய் பாஷைகளில் பேசுகிறேன். இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்" எனக் குறிப்பிட்டான்(1கொரி 14:18; அப் 9: 17,18). சமாரிய ஸ்திரீகள் ஆவியைப் பெற்றபோது சீமோன் போன்ற மாயவித்தைக்காரன் "காணக்கூடிய" அடையாளம் ஒன்றிருந்தது(அப் 8:17,18).

இந்த உதாரணத்தின் அடிப்படையில் அபிஷேகத்தை ஒருவர் பெறுகையில் அந்நியபாஷையில் பேச பொதுவாக எதிர்ப்பார்க்கலாம். ஆனால் நேரடியான "உபதேசம்" என்று ஒன்று இல்லாததால், அந்நியபாஷையில் பேசாதவர் பேசும்வரை அபிஷேகம் பெறவில்லை என்று சொல்லமுடியாது. ஆயினும் அனுதின வாழ்வில் ஒவ்வொரு விசுவாசியும் தேவனிடத்தில் இக்கிருபையை நாட ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆவியின் ஒன்பது வரங்களில் பிரதானமாக ஜெபத்திலும் துதியிலும் தேவனை நோக்கிச் செயல்படுவது அந்நியபாஷை தானே(1கொரி 12:7-10; 14:13-17). மட்டுமல்ல, இதனால் பேசுகிறவனுக்கு பக்திவிருத்தி உண்டாகிறது(1கொரி 14:4). அவன் புத்துணர்வு பெற்று உள்ளான மனிதனில் பெலப்படலாம்(ஏசா 28:11,12; யூதா 20). அன்பில்லாமல் அந்நியபாஷை பேசுவதும் சாத்தியமான ஒன்றே(1கொரி 13:1-3). ஒருவரது ஆவிக்குரிய நிலையை அந்நிய பாஷையை வைத்து கணித்துவிடமுடியாது. மரமானது அதின் "கனியினால்" அறியப்படும்(மத் 12:33). கனிகளும் வரங்களும் சமநிலைப்படுத்தப்பட வேண்டும்.

**கே: அக்கினி ஞானஸ்நானம் என்றால் என்ன?**

ப: பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் சுத்திகரிக்கும் வல்லமையே அக்கினி ஞானஸ்நானம் ஆகும். அது ஒரு தனி அனுபவமல்ல. மத்தேயுவும் லூக்காவும் ஆவியானவரோடு அக்கினியையும் குறிப்பிட்டனர்; மாற்கும் யோவானும் அக்கினியைக் குறிப்பிடவில்லை (மத் 3:11; லூக் 3:16; மாற் 1:8; யோ 1:33). யோவான் ஸ்நானகன் சொன்னதை இயேசு மேற்கோல் காட்டியபோது அக்கினியைக் குறிப்பிடவில்லை(அப் 1:5). அப்போஸ்தல நடபடிகளிலும் ஆவியானவரை பெற்றுக்கொண்ட நான்கு சம்பவங்களிலும் அக்கினியைப் பற்றி லூக்கா குறிப்பிடவில்லை(8:16,17; 9:17; 10:44; 19:6).

ஆவியானவர்மூலம் கிறிஸ்து செய்யப்போகும் ஊழியத்தை யோவான் ஸ்நானகன் இவ்விதம் முன்னறிவித்தான். "தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்" -தூற்றுதல் காற்றின் பணி! "பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்" - எரித்தல் அக்கினியின் பணி! (மத் 3:12). காற்று, அக்கினி ஆகிய இவ்விரு அடையாளங்களும் பெந்தேகொஸ்தேநாளில் காணப்பட்டன(அப் 2:2,3) அடுத்தடுத்து ஆவியானவர் ஊற்றப்பட்ட சம்பவங்களில் இவை இல்லை. ஆவியான தேவன் பட்சிக்கிற அக்கினி (எபி 12:29). அவர் தமது "எரிச்சலினால்" நமது வாழ்விலுள்ள விக்கிரகங்கள் யாவையும் பட்சிக்கிறார் (உபா 4:23,24; யாத் 20:4,5). அவை யாவும் எரிக்கப்பட நமக்கு கட்டளை கொடுக்கிறார்(உபா 7:5). நமது இருதயத்தில் அவருக்குரிய இடத்தை எதுவும், எவரும் எடுப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பொறுக்கமாட்டார். எல்லாவற்றிலும் அவரே முதல்வராயிருக்க வேண்டும். நாம் உலகத்தோடு சிநேகம் கொள்ளும்போது அவரது கோபம் பற்றியெரியும் (யாக் 4:4,5).

தேவன் "புடமிடும் அக்கினி" போன்றவர்(மல் 3:3,2). தமது வெள்ளியைப் புடமிட்டு தமது கனத்துக்குரிய பாத்திரமாக நம்மை புடமிடுவார்(2தீமோ 2:21). புடமிடப்படும்போது வேதனையாகத்தான் இருக்கும். அது பாடுகளின் ஞானஸ்நானம்(லூக் 12:49,50). ஆனால் புடமிடும் குகை வழியே நாம் செல்லுகையில், பொன்னிலும் விலையேறப்பெற்ற நமது விசுவாசம் இன்னும் சுத்தமாகும்(1பேது 1:6,7). "பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியத்தில்" நாம் தினமும் நடக்கையில், நாம் இயேசுவைப் போல பரிசுத்தவான்களாகும்வரை அக்கினி நம்மைச் சுத்தம் பண்ணிக்கொண்டேயிருக்கும் (2கொரி 3:17,18).

ஜெபிக்கும்போது அல்லது துதிக்கும்போது தங்கள் உடலில் ஓர் அனலை உணர்ந்ததாகச் சிலர் சாட்சி பகருகின்றனர். இவ்வித உணர்ச்சியான அனுபவங்களுக்கு எதிராக ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் அக்கினி ஞானஸ்நானம் என வேதம் குறிப்பிடுவது நிச்சயமாக அதுவல்ல.

*கே: தேவன் இன்று எல்லாரையும் சுகமாக்குகின்றாரா?*

*ப:* தேவன் குணமாக்குபவர். "யேகோவா ரப்பா" என்று தம்மை வெளிப்படுத்தியுள்ளார்(யாத் 15:26). அவர் மாறவில்லை. அவரது வல்லமை குறையவில்லை. தமது குமாரனது பூவுலக ஊழியத்தில் தேவனது குணமாக்கும் வல்லமை நிகரற்றவகையில் வெளிப்பட்டது. எல்லாவிதப் பிணியாளிகளையும் அவர் சுகப்படுத்தினார். அவரை தொட்ட யாவரும் சுகம் பெற்றனர். "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்"(எபி 13:8). சிலுவையில் நமது பாவங்களையும் ரோகங்களையும் சுமந்தார்(ஏசா 53:4,5; மத் 8:16,17) அவரது இரத்தத்தினால் கழுவப்படுகிறோம்; அவரது தழும்புகளினால் குணமாகிறோம். சபைக்கும் குணமாக்கும் வரங்களைத் தேவன் தந்துள்ளார்(1கொரி 12:9,28).

ஆனால் நமது உடல் சாவுக்கேதுவானதே. இன்னும் நாம் மரணத்திற்கு உட்பட்டிருக்கிறோம் (1கொரி 15:26). இனி வேதனையோ துக்கமோ இல்லை எனும் அந்நாள் வரும்வரை மனிதருக்கு நேரிடும் நோய்களால் நாமும் பாதிக்கப்படலாம்(வெளி 21:4). விசுவாசியொருவன் வியாதிப்படும்போது ஜெபிக்கவேண்டும். சபையின் மூப்பர்களை வரவழைத்து "விசுவாச ஜெபம்" ஏறெடுக்கவேண்டும். பாவமேதுமுண்டோ என்று தற்பரிசோதனை செய்யவேண்டும். பொதுவாக, அவன் சுகம் பெறுவான்(யாக் 5:14-16). ஆனால் தேவன் சுகமாக்காமல்விடும் வேளைகளும் உண்டு. அவருக்குமுன் உத்தமமாய் நடந்தும் சுகம்பெறாத பலரை வேதம் குறிப்பிடுகிறது. பவுல் தனது "மாம்சத்தில்" இருந்த முள்ளுடன் சமாளிக்கவேண்டியிருந்தது. போதுமான கிருபையை மட்டும் தேவன் அவனுக்களித்தார்(2கொரி 12:7-10). தீமோத்தேயுவின் வயிறு "அடிக்கடி" பெலவீனப்பட்டது(1தீமோ 5:23). எப்பாப்பிரோத்து வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்(பிலி 2:25-27). அரிய அற்புதங்களைச் செய்த எலிசா தீர்க்கதரிசி வியாதியில் மரித்தான் (2ராஜா 13:14). சுகமடையாத பரிசுத்தவான்கள் சரித்திரத்தில் ஏராளம். சாகும்வரை குருடாயிருந்த ஃபேன்னி கிராஸ்பி என்ற அம்மையார் கிறிஸ்தவ உலகிற்கு 8000 பாடல்களைத் தந்துள்ளார். அதில் ஒன்றுதான் "அருளின் மாமழை பெய்யும்" என்ற பாடல்!

நன்மையான யாவும் தேவனிடமிருந்து வருகிறது. அவர் வியாதிக்குக் காரணரல்ல. ஆனால் அவர் அதை சிட்சையின் பிரம்பாகவோ நாம் விளங்கமுடியாத ஏதோவொரு காரணத்திற்காகவோ பயன்படுத்துகிறார். அவர் சர்வவல்லவர். ஆனால் அதன்முடிவு என்னவென்றால் நன்மையோ அல்லது தீமையோ சகலமும் அவரது பிள்ளைகளுக்கு நன்மைக்கேதுவாகவே இருக்கும் (ரோ 8:28).

*கே: சுகமளிக்கும் கூட்டங்களைப் பற்றி?*

*ப:* சென்ற இடமெல்லாம் இயேசு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். நோயாளிகளை சுகமாக்கினார்(மத் 9:35). அவரது ஊழியத்தில் அற்புதங்கள் சாதாரணம். "அவரது உபதேசத்தைக் கேட்கவும் தங்கள் வியாதிகளினின்று குணமாக்கப்படவுமே" திரளான மக்கள் அவரிடம் வந்தனர்(லூக் 6:17). அவரை மேசியா என்று நிரூபித்த அடையாளங்கள் இவையே(மத் 11:2-5).

பன்னிருவரை சுவிசேஷம் அறிவிக்கப் பணித்தபோது "வியாதியுள்ளோரைக் குணமாக்குங்கள்" என்று தெளிவாய்க் கட்டளையிட்டார்(மத் 10:7,8). ஆவியானவர் சபைக்களித்துள்ள குணமாக்கும் வரங்கள் இன்றும் கிறிஸ்துவின் குணமாக்கும் ஊழியத்தைத் தொடர்ந்து நிறைவேற்றவே. ஆனால் இன்று சுகமளிக்கும் கூட்டங்களில் துர்ப்பிரயோகம் நடப்பது சரியானதல்ல. சுகமளிக்கும் ஊழியங்களில் கர்த்தரின் நாமத்திற்கே மகிமையைக்கொண்டு வரவேண்டும். சுவிசேஷகன்மீது கவனம் ஈர்க்கப்படுவது சரியல்ல. சில சுவிசேஷகர்கள் வேதத்திற்கு புறம்பாக சுகமளிக்க முற்படுகின்றனர். உதாரணமாக, "இன்று இடுப்புக்குக்கீழ் சுகவீனமுள்ளவர்களை தேவன் சுகமாக்கப்போகிறார். நாளைக்கு இடுப்புக்கு மேல்! தொலைக்காட்சி பத்திரிகைகளிலும் அதனை மிகைப்படுத்தி அறிக்கைகளை துணிந்து வெளியிடுகின்றனர். இவ்விதமான காரியங்கள் நாசரேத் ஊர் தச்சுப் பிரசங்கியாருக்குப் பொருந்துமா?

கிறிஸ்தவர்களுக்கான சுகமளிக்கும் ஊழியம் உள்ளூர் சபை சூழலிலேயே பெரும்பாலும் இருக்க வேண்டும்(யாக் 5:14). குணமாக்கும் வரம்பெற்ற ஊழியர் தனிக்காட்டு ராஜாக்களாயிராது சபையின் பிற தலைவர்களோடு ஆவிக்குரிய பாதுகாப்புக்கும் கணக்கொப்புவித்தலுக்கும் இணைப்பு வைத்துக்கொள்ளவேண்டும்(அப் 8:12-17). இப்படிச் செய்தால் சபை வளரும். சபை கட்டப்படும். சொந்த சாம்ராஜ்ஜியங்கள் கட்டப்படாது. ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரமனுக்குக் கீழ்ப்படிந்த பரிசுத்தவான்கள்

- ஆன் பிரஸ்டன் -

✿ அயர்லாந்தில் ஓர் எளிய குடும்பத்தைச் சேர்ந்த வள் ஆன் பிரஸ்டன். ஆடு மேய்ப்பதுதான் இவளது குடும்பத்தொழில். ஞாபகசக்தி குறைவு காரணமாக அவளால் படிக்க முடியவில்லை. எனவே மற்ற வீடுகளில் வீட்டுவேலையும் செய்து வந்தாள்.

✿ ஒரு பிரசங்கத்தின் மூலம் "தான் பாவி" என்பதை உணர்ந்த அவள் முதன்முறையாக முழங்கால் படியிட்டு ஜெபித்து தன் பாவங்களை அறிக்கையிட்டுக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டாள்.

✿ "தேவனே என் இருதயத்தை அழுத்திக்கொண்டிருந்த என் பாவ சுமைகளை எடுத்துப்போட்டீர். இனி உம்முடைய வேதத்தை வாசிக்க கற்றுக் கொடுக்கமாட்டீரோ" என சிறு குழந்தையைப் போல தேவனிடம் கேட்டாள். ஆனின் வேதாகம வாஞ்சையை அறிந்த தேவன் அவள் வேதாகமத்தை வாசிக்க உதவினார்.

✿ வீட்டுவேலைகளை செய்தாலும் அடிக்கடி கோபப்படுவதும் பாவம் செய்வதும் பின் அதற்காகத் துக்கிப்பதும் ஆனுக்கு வழக்கமாகிவிட்டது. அவள் தனது கோபத்தை கட்டுப்படுத்த முயன்றாள். உண்மையான கிறிஸ்தவன் தான் பிழைகளை செய்தபோது அதற்காக உண்மையாகவே வருந்துவான் என உணர்ந்த ஆன் தனது பிழைகளை அறிக்கையிட்டு மனந்திரும்பலானாள்.

✿ பின்பு கனடாவுக்கு தனது எஜமானோடு வந்தடைந்த ஆன் வீட்டுவேலைகளோடுகூட ஜெப வாழ்க்கையிலும் அதிகமாக ஈடுபட்டாள். சங் 34:16ம் வசனத்திற்கு மிகவும் பயந்த அவள் இயேசுவை விசுவாசித்தாள். ஒரு வாரம் உபவாசம் இருந்தாள். அதன்பின்பு அவள் விசுவாசத்திலும் அன்பிலும் நிறைந்தவளானாள்.

✿ அவளது பரிசுத்த ஜீவியத்தைக் கண்ட சிறுவர்கள் அவளை "பரிசுத்த ஆன்" என கேலியாக அழைத்தனர். ஆனின் வாழ்க்கையில் தீய குணங்களெல்லாம் ஒழிந்தன. பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்று அவள் முன்மாதிரியான வாழ்க்கை வாழத் தொடங்கினாள்.

✿ ஆயினும் குறும்புக்கார சிறுவர்கள் அவளுடைய பொருட்களை எடுத்து ஒளித்துவிடுவார்கள். அவள் நேராக முழங்கால்படியிட்டு தேவனிடம் கேட்பாள். பின் நேராக சென்று ஒளித்துவைக்கப்பட்ட பொருளை எடுத்துவிடுவாள். சிறுவர்களுக்கு இது வியப்பாக இருக்கும்.

✿ ஒரு கோடைக்காலத்தில் அவள் இருந்த வீட்டில் கிணறு வற்றிவிட்டது. அரைமைல் தூரம் சென்றே சிறுவர்கள் குடிநீரை கொண்டுவருவார்கள். ஆன் அந்த சிறுவர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்திருந்தாள். சிறுவர்கள் ஆனிடம் "அப்படியானால் நம் வீட்டு கிணற்றில் தண்ணீர் வரவேண்டுமென ஏன் உங்கள் பரமபிதாவிடம் கேட்கக்கூடாது?" என்றனர். அன்று இரவு முழுவதும் ஆன் ஜெபித்தாள்.

✿ மறுநாள் காலை விடிந்தது. சிறுவர்களை அழைத்துக்கொண்டு கிணற்றண்டை சென்றாள். சிறுவர்கள் ஒன்றும்புரியாது விழித்தனர். பேச்சற்று நின்றனர். ஆம் நித்திய தேவன் சுத்தமான குளிர்ந்த தண்ணீரை அதில் கட்டளையிட்டிருந்தார்.

✿ இதனைக்கண்ட பெண்களும் ஆச்சரியப்பட்டனர். தேவனுக்கு இவ்வளவு அருகில் வாழவும் நம்மால் முடியுமா என்று அவர்கள் வியந்தனர்.

✿ ஒரு எளிய வேலைக்காரப் பெண்ணான ஆனினால் வேதாகமத்தை மாத்திரமே வாசிக்க முடிந்தது. மற்ற புத்தகங்களெல்லாம் அவளுக்கு அந்நிய மொழி போலத்தான் இருந்தது.

✿ ஆன் வேதவசனங்களை பிழையின்றி மனப்பாடம் செய்யத்தொடங்கினாள். மற்றவர்களைப்போல விரைவில் மனப்பாடம் செய்யும் திறமையை தர வேண்டுமென ஆன் தேவனிடம் வேண்டினாள். அவள் கற்ற வேதவசனங்களை அவள் மரிக்கும் வரை மறந்துபோகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தெருக்களின் பெயரையோ, வீட்டு இலக்கத்தையோ ஞாபகத்தில் வைக்கமுடியாதவள் எப்படி வேதவசனங்களை மனப்பாடம் செய்தாள்? ஆம், தேவனின் வழிநடத்துதலை அவள் பெற வாஞ்சையோடு வார்த்தைகளை நாடினாள்.
- ஒருமுறை அடுத்த வீட்டிலிருந்தவள், ஆன் வேலை செய்த வீட்டில் பொருட்களைத் திருட எண்ணி அவளுக்கு பாலில் விஷத்தை கலந்து கொடுத்தாள். அப்போஸ்தலனாகிய பவுல் நச்சுப் பாம்பால் கடிக்கப்பட்ட பொழுதும் எப்படி அவர் காப்பாற்றப்பட்டாரோ அதை ஆனுக்கு தேவன் ஞாபகமூட்டி அவளுக்கு ஆபத்து ஒன்றும் வராமல் காத்துக்கொண்டார்.
- ஆன் எந்தவேலையைச் செய்தாலும் உற்சாகத்துடனும் முழுமனதுடனும் கருத்துடனும் செய்வாள். இப்படி சுறுசுறுப்புள்ள அவள், தானியேல் யோசேப்பு போல தனது எஜமானின் வீட்டு வேலைகள் எல்லாவற்றிலும் காரியச்சித்தி உள்ளவளாகவும் உண்மையுள்ளவளாகவும் இருந்தாள்.
- உலகபிரகாரமான பொது அறிவு அவளுக்கு இல்லாவிட்டாலும் ஆன், தேவனில் முழுவதும் சார்ந்திருந்தபடியினால் அவள் எதற்கும் அஞ்சுவதில்லை.
- ஆரம்பநாட்களில் ஆன் தன்னிடம் வரும் நோயாளிகளுக்கெல்லாம் ஜெபித்து வந்தாள். ஆனால் பின் தேவனுடைய சித்தத்தை அறிந்து ஜெபிக்கக் கற்றுக்கொண்டாள். "என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுகிறேன்" என்று தேவன் கூறுவதை அடிக்கடி நினைவுகூருவாள்.
- தினமும் இரண்டு மணிநேரம் தேவ பிரசன்னத்தில் செலவிடுவாள். அந்த ஜெப வாழ்க்கை மூலமாக அவளது தேவைகள் ஒவ்வொன்றும் சந்திக்கப்பட்டதோடு கூடவே அற்புதங்களும் நிகழ்ந்தன.
- ஒரு குருவானவர், "அந்த சாதாரண ஐரிஷ் பெண்ணுக்கு தெரிந்த அளவு எனக்கு உண்மையாக தேவனுக்குரிய வாழ்க்கையைக் குறித்து தெரிந்திருக்கவில்லையே" என வியந்தார். காரணம் அவள் தேவனுடன் சம்பாஷிப்பதுதான்.
- ஆனின் வாழ்க்கையானது ஒவ்வொருவரும் எந்த நிலைமையில் இருந்தாலும் பரிசுத்தமான ஜீவியத்திலும் ஜெப வாழ்க்கையிலும் வாஞ்சை கொண்டவர்களாக வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு!*
*பிலி 4:13*

**'இஸ்ரவேலே, நீ பாக்கியவான். கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்? உனக்கு சகாயஞ்செய்யும் கேடகமும் உனக்கு மகிமைபொருந்திய பட்டயமும் அவரே!'**
**(உபாகமம் 33:29)**

## கொரியாவில் புத்தாண்டு

போதகர் லூயிஸ் லெவலின் என்பவர் கொரிய நாட்டு வழக்கமொன்றைக் குறித்து பின்வருமாறு கூறுகிறார். எல்லாவித கெட்ட பழக்கவழக்கங்களையும் மறந்து, புதிதாக புத்தாண்டை ஆரம்பிப்பதற்காக ஒவ்வொருவரும் தாங்கள் என்னென்ன காரியங்களை விட்டுவிடவேண்டு மென்று விரும்புகின்றனரோ, என்னென்ன காரியங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்று விரும்புகின்றனரோ, அவற்றை ஒரு கடதாசி பட்டத்திலே எழுதி அதை ஆகாயத்திலே பறக்க விடுவார்களாம். அது கண்ணுக்கெட்டா தூரத்தில் பறந்து கொண்டிருக்கையில் அதன் நூலை அறுத்துவிட அது பார்வையினின்றே மறைந்து விடுவதுபோல தங்களுடைய கடந்த கால குற்றங்களும் மீறுதல்களும் நித்திய காலமாக மறைந்து விட்டதாக எண்ணிக் கொள்வார்களாம்.


ஜாக்கிரதை! பாவமான காரியங்களை காற்றிலே பறக்க விட்டுவிட்டு தப்பித்துக்கொள்ள பாவமானது எங்கோ இருந்து வந்த ஒன்றல்ல. அது நமக்குள்ளேயே இருக்கும் ஒன்று. அதை அகற்ற நம்மைப் படைத்த ஆண்டவரால் தான் முடியும். அதற்காகத் தான் இயேசுகிறிஸ்து இரத்தஞ்சிந்தி மரித்தார். எனவே அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டால் தான் புத்தாண்டை நாம் புதிய விதத்தில் ஆரம்பிக்கலாம்.

- "சத்தியவசனம் 1980"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிபுரியும் பெண்ணின் தீர்மானங்கள்



டாக்டர் லில்லியன் ஸ்டான்லி

❖ தேவனுக்கு முதலிடம் கொடுத்துவிடத் தீர்மானிக்கிறேன். முதலில் தேவனுக்கும் பின் குடும்பத்திற்கும் அடுத்ததாக வேலைக்கும் முக்கியத்துவமளிப்பேன். நேரமில்லை, களைப்பாயுள்ளது, அதிகவேலை என காரணங்காட்டி தியானவேளையை அசட்டை செய்யமாட்டேன். வேலைத்தலத்தில் தினமும் ஒருவருக்காவது சாட்சி பகர ஆயத்தமாயிருப்பேன். ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளென்று தூங்கிக் கழிக்காமல் தவறாமல் ஆலயம் செல்வேன்.

❖ குடும்பத்திற்குரிய இடத்தை கொடுப்பேன். குடும்ப காரியங்களைக் கவனியாததற்குச் சாட்டுபோக்கு சொல்லமாட்டேன். நேரத்தை வீணாக்காமல் மறு நாளுக்குரிய காரியங்களை முந்தின நாளே திட்டமிடத் தீர்மானிக்கிறேன். வேலையிலிருந்து வீடு வந்தவுடன் முகங்கழுவி, முகமலர்ச்சியோடு காணப்படுவேன். வேலைத்தளக் கவலை, பாரம், கோபங்களை வீட்டிற்குச் சுமந்து வரமாட்டேன். மேலதிக சம்பளத்திற்காக கணவனையோ பிள்ளைகளையோ விட்டுப் பிரிவதில்லை எனத் தீர்மானிக்கிறேன்.

❖ வேலை நேரத்தில் கருமமே கண்ணாயிருப்பேன். மேலதிகாரி இருந்தாலும் இராவிட்டாலும் என் வேலையைச் சுத்தமாகவும், ஒழுங்காகவும் பிழையின்றி என் முழுத் திறமையோடு செய்வேன். வேலைக்குப் பிந்திச் செல்லமாட்டேன். வேலை நேரத்தைச் சொந்தக் காரியத்திற்காகப் பயன்படுத்தாமலும் பகற்கனவு, அரட்டை, தூங்கி வழிதலில் வீணாக்காமலும் இருப்பேன். நேர்மையான சான்றும் சுத்தமான சாட்சியுடனும் வாழ்வேன். பொய்க் கையெழுத்திடவோ பொய்ச் சான்றிதழ் அளிக்கவோ மாட்டேன். அலுவலகப் பொருட்களைச் சொந்த உபயோகத்திற்கு எடுக்கமாட்டேன். அலுவலகச் சட்ட திட்டங்களுக்கு மனமுவந்து கீழ்ப்படிவேன்.

❖ நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரமல்ல, முரட்டு குணமுள்ள மேலதிகாரிக்கும் கீழ்ப்படியத் தீர்மானிக்கிறேன். அவர்களிடம் விவாதிக்கவோ சண்டையிடவோ மாட்டேன். அவர்களுக்குப் பயந்து மரியாதையோடு நடந்துகொள்ளுவேன். முறுமுறுப்போடும், தயக்கத்தோடும், எரிச்சலோடுமல்ல; முழுமனதோடும் பணிவோடும் கீழ்ப்படிவேன். மற்றவர்களுக்கு மேலாக நான் மதிப்புப் பெறும்படி அதிகாரி முன் பொய்யாய் முகஸ்துதிபாடமாட்டேன். அவரைக் குறித்துப் புறங்கூற மாட்டேன்.

❖ அதிகாரியை தேவனது பிரதிநிதியாகக் கணித்து அவரது ஒவ்வொரு நடவடிக்கையையும் கேள்வி கேட்காதிருக்க தீர்மானிக்கிறேன். அவரைத் தாண்டி அவரது மேலதிகாரியிடம் குறுக்கு வழியில் எடுத்ததெற்கெல்லாம் செல்லமாட்டேன். அதிகாரிகள் மூலமாய்த் தேவன் என்னை நடத்தும்படியாக தினமும் ஜெபிப்பேன். அதிகாரி தரும் பாவ கட்டளைகளுக்குப் பணிய மறுத்து தைரியமாய் உத்தமத்தில் நிற்பேன். தனிமையில் தைரியமாக ஜெபத்துடனும் அன்புடனும் அவர்கள் குற்றங்களை எடுத்துரைப்பேன். வேலையில் சிறுபிரச்சினைகளுக்கும் மாம்சீக முறைகளைக் கையாடாமல் தேவனுக்கு ஜெபத்தில் தெரியப்படுத்துவேன்.

❖ பாடுகளுக்குரிய பலனைத் தேவனிடத்திலிருந்தே பெறத் தீர்மானிக்கிறேன். என் நிலைமைக்காக மேலதிகாரிகளைக் குற்றஞ்சாட்டவோ நியாயந் தீர்க்கவோ செய்யாமல் காரியத்தைக் கர்த்தர் கரத்தில் ஒப்புவிப்பேன். பதவி உயர்வுக்கு தேவனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கியிருப்பேன். என் தவறுகளுக்குப் பயப்படாமல் ஒத்துக்கொண்டு அதற்குரிய தண்டனையை முகங்கோணாமல் ஏற்றுக்கொள்வேன்.

❖ சகஊழியருடன் நல்லுறவை நிலைநாட்டத் தீர்மானிக்கிறேன். தினம் காலையில் புன்முறுவலோடு ஒவ்வொருவரையும் வாழ்த்துவேன். கூடுமானவரை அவர்களுக்கு உதவிசெய்வேன். அவர்களை நியாயந்தீர்க்கவோ அவர்கள் குற்றத்தை மேலதிகாரிகளுக்குக் காட்டிக்கொடுக்கவோ அவசரபடமாட்டேன். அவர்களுக்கு ஆலோசனை சொல்வேன். அவர்கள் புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளத் தயங்கமாட்டேன். பிறர் வேலையைப் பழிக்கமாட்டேன். என் வேலையைக் குறித்து வீண் பெருமிதம் கொள்ளமாட்டேன்.

❖ அடுத்த பாலாரோடும் சகஊழியர், அதிகாரிகளிடமும் கவனமாய் நடந்துகொள்ளத் தீர்மானிக்கிறேன். அவர்களுக்குச் சோதனையாகிவிடாதபடி எச்சரிக்கையாயிருப்பேன். எல்லாப் பரிசுத்தத்தோடும்கூடிய நட்புறவேயன்றி வேறு தொடர்புகளைத் தவிர்ப்பேன். இச்சையான மனிதரை விட்டுவிலகுவேன்.

❖ என் வருமானத்தைக் குறித்து எச்சரிக்கையாய் இருப்பேன். அதை சுயநலமாக செலவழிக்காமல் வீட்டிற்குக்கொண்டு வந்து கணவரிடம் (பெற்றோரிடம்) கொடுத்து, ஜெபித்து, துதிசெலுத்திய பின்னர் மொத்த வருமானத்தோடுகூட மாதச்செலவைக் கணக்கிடுவேன். குறைந்தபட்சம் பத்தில் ஒருபகுதியைத் தேவனுக்குக் கொடுத்துவிடத் தீர்மானிக்கிறேன். ஏழைகளுக்கென்று ஒருபகுதியை ஒதுக்குவேன். உடன் ஊழியரின் தகுதிக்கு நிகராயிருக்க வேண்டுமென்று இச்சித்து கடனுக்குப் பொருட்களை வாங்கி துன்பப்பட மாட்டேன். என் நன்றிக்கு அடையாளமாகத் தேவையிலிருக்கும் என் பெற்றோருக்குச் சிறு தொகையாகிலும் அனுப்புவேன்.

❖ என்னைக்குறித்த தாழ்வு மனப்பான்மையை அகற்றிவிடத் தீர்மானிக்கிறேன். 'நான் உதவாக்கரை','என் வேலை பயனற்றது' என்று பிசாசு கூறுகிற பொய்களை நம்பாமல் என் கையில் கொடுக்கப்பட்டது எதுவோ அதை முழுச்சக்தியோடு செய்வேன். புதிய பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளத் தயங்கமாட்டேன். என் வேலைகளைக் குறித்து தேவன் கொடுத்துள்ள வாக்குத்தத்தங்களை உரிமைப் பாராட்டி அவருடைய பெலத்தினால் எந்தச் சோர்வையும் சந்தித்து மேற்கொள்ளத் தீர்மானிக்கிறேன். ❑


இப்பொழுது சத்தியவசன புத்தகச்சாலையில் பெற்றுக்கொள்ளலாம்!




"சரியான உறவுகளை மகிழ்ந்தனுபவித்தல்"
எபேசிய நிருபத்திலிருந்து வேத ஆராய்ச்சி நூல்
விலை ரூ.125/= (தபால் செலவு தனி)

யாக்கோபு நிருபத்திலிருந்து
"முதிர்ச்சியை நோக்கி" வேத ஆராய்ச்சி நூல்
விலை ரூ.60/= (தபால் செலவு தனி)




மேலதிக விபரங்களுக்கு:
நிரஞ்சன் அல்லது யசோதரன்
தொலைபேசி: 011-269541.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனிய புத்தாண்டில் என் தியானவேளை தீர்மானங்கள்!!!

**'தேவனே, நீர் என்னுடைய தேவன். அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்.' (சங்கீதம் 63:1)**

தினமும் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும் போது, ஒரு ஒழுங்கைக் கடைப்பிடிப்பது நல்லது. அங்குமிங்குமாக திருப்பி ஏதாவது ஒரு பகுதியை மேலோட்டமாக வாசிப்பதினால் எந்த விதத்திலும் பயன்பெற முடியாது. பரிசுத்த வேதாகமத்தில் ஒரு புத்தகத்தைத் தெரிந்துகொண்டு முதல் அதிகாரத்தில் ஆரம்பித்து, தொடர்ந்து ஒவ்வொருநாளும் ஒரு அதிகாரத்தைப் படியுங்கள். அல்லது ஒரு சில வசனங்கள் அடங்கிய வேதப்பகுதியை வாசித்து வசனங்களைத் தியானியுங்கள். தினசரி வேதவாசிப்பு அட்டவணையைப் பயன்படுத்துவது அதிக உதவியாக இருக்கும்.

நீங்கள் தினத்தியானப் புத்தகத்தையோ அல்லது கிறிஸ்தவப் பத்திரிகைகளில் வரும் அனுதின வேத தியானக்குறிப்புகளையோ பயன்படுத்துவீர்களா னால் கொடுக்கப்பட்டிருக்கும் வேதபகுதியை முதலா வது வாசியுங்கள். பின் கீழ்க்காணும் கேள்விகளுக்கான பதில்களை ஜெபத்துடன் யோசித்துப் பாருங்கள். இதற்குபின், குறிப்புகளை வாசிப்பது அதிக பயனைக் கொடுக்கும்.

குறிப்பிட்ட வேதாகமப் பகுதியை வாசிக்கும்முன் இவ்வாறு ஜெபியுங்கள்.

"பரம தகப்பனே, நீர் கொடுத்திருக்கும் வேதாகம புத்தகத்திற்காக உமக்கு நன்றி சொல்லுகிறேன். உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும். நீர் என்னோடு பேசும்படி கேட்கிறேன். ஆமென்."

அதன்பின் கீழ்க்கண்ட கேள்விகளில் ஒன்றிற்கோ, ஒன்றிற்கு மேற்பட்ட கேள்விகளுக்கோ பதில் கண்டுபிடிக்கும்வரை அந்த பகுதியை மீண்டும் மீண்டும் ஜெபத்துடன் வாசியுங்கள். வேதாகமப் பகுதியை பல முறை வாசியுங்கள். பின் ஒருமுறை வாய்விட்டுக் கருத்துடன் சத்தமாக வாசியுங்கள். மெதுவாகவும், கவனமாகவும், எதிர்பார்ப்புடனும் வாசித்துக் கொண்டே இருங்கள். காலை நேரமே வேதவசன தியானத்திற்கான சிறந்த நேரம் எனவே ஒவ்வொரு நாளும் குறைந்த பட்சம் 15 நிமிடங்களாவது செலவிடுங்கள்.

1. வாசிக்கும் பகுதியின் முக்கியமான கருத்து அல்லது பிரதான செய்தி என்ன? வாசிக்கும் பகுதியில் யாரைப் பற்றி அல்லது எதைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது?
2. அந்தப் பகுதிக்கு ஆதாரமாயிருக்கும் வசனம் என்ன?
3. நீங்கள் வாசிக்கும் பகுதியில் குறிப்பாக உங்கள் மனதில்படும் வார்த்தையோ, சிந்தனையைத் தூண்டும் வாக்கியமோ, வசனமோ உண்டா என்று பாருங்கள்.
4. ஆண்டவர் கொடுக்கும் வாக்குத்தத்தம் என்ன?
5. கர்த்தர் இடும் கட்டளை என்ன?
6. எதைக்குறித்து ஆண்டவர் உங்களை எச்சரிக்கிறார்?
7. ஜெபத்தைப் பற்றி இந்தப் பகுதியில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?
8. வாசிக்கும் பகுதியிலிருந்து ஆண்டவரைப் பற்றி என்ன கற்றுக் கொள்ளுகிறீர்கள்?
9. வேதாகமப் பக்தர்களின் முன்மாதிரி ஏதாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா?
10. நீங்கள் விடவேண்டிய பாவத்தைக் குறித்து வேத வசனங்கள் உண்டா என்று கவனமாக படித்துப் பாருங்கள்.
11. வாசிக்கும் பகுதியில் உள்ள வசனத்திற்கு ஒத்த வேறு வசனங்களைத் தொடர்புபடுத்திப் பாருங்கள்.
12. உங்களுடைய வாழ்க்கையில் உள்ள ஏதாவது ஒரு தேவைக்கோ, சூழ்நிலைக்கோ, பொருத்தமான வசனம் உண்டா என்று தேடிப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. வாசிக்கும் பகுதியில் உள்ள வார்த்தைகளை எப்படி உங்கள் ஜெபமாக மாற்ற முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

14. நீங்கள் வாசிக்கும் பகுதியில் உள்ள விளங்குவதற்கு கடினமான வசனங்களைக் குறித்துக் கொண்டு, வேத வசனங்களைக் கற்றறிந்தவர்களிடம் விளக்கங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். ஜெபத்துடன் வேதாகமத்திலிருந்து கண்டுகொள்ளும் பதில்களை ஒரு நோட்டில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு நாளும் உங்கள் மனதில் பதிந்த அளவிற்குத் தெளிவாகத் தென்படுகிற வசனத்தை, கருத்தை அந்த நாளுக்குத் தேவன் உங்களோடு பேசிய செய்தியாக எடுத்துக்கொள்ளுங்கள். கற்றறிந்த சத்தியங்களைக் கருத்தாகத் தொகுத்து மறக்கமுடியாத அளவிற்கு மனதில் பதித்துக்கொள்ளுங்கள். வேதாகமப் பகுதியின் மூலம் உங்களுடன் ஆண்டவர் பேசி, போதித்தவற்றிற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

**'கர்த்தாவே காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர். காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி காத்திருப்பேன்.' - சங்கீதம் 5:3**

நாள்முழுவதும் அதையே யோசித்துக்கொண்டு இருங்கள். ஒவ்வொருநாள் மதியத்திலும், இரவிலும் அன்று காலையில் கற்றுக்கொண்ட வசனத்தை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்குப் பயனுள்ளதாக இருந்த வேத வசனத்தை ஒவ்வொருநாளும் எழுதிவைத்துக் கொள்ளுவது நல்லது. கற்றுக்கொண்ட உண்மைகளை அனுபவத்தில் கொண்டு வருவதும், வாழ்க்கையில் கடைப்பிடிப்பதும்தான் மிக முக்கியம். அதற்காக கர்த்தர் உங்களுக்கு கிருபை தரவும் உங்களைப் பெலப்படுத்தவும் ஜெபியுங்கள்.

காலைநேர வேதவசன தியானத்தில் நீங்கள் கற்றுக் கொண்டவைகளை மற்றுமொரு விசுவாசியுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் அதற்கு முந்திய ஆறு நாட்களில் கற்றுக்கொண்டவைகளை ஒருமுறை திரும்பிப் பாருங்கள்.

**'காலைதோறும் என்னை எழுப்புகிறார். கற்றுக்கொள்கிறவனைப் போல நான் கேட்கும்படி என் செவியை கவனிக்கச் செய்கிறார். - ஏசாயா 50:4**

இந்த குறிப்புக்களை வெட்டியெடுத்து உங்கள் பைபிளில் வைத்துக்கொண்டவர்களாக அனுதினமும் இதைப் பயன்படுத்துங்கள்.

**'காலையில் எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்.' - சங்கீதம் 90:14**

நீங்கள் வாசிக்கும் பகுதியிலிருந்து ஏதாவது ஒரு வசனம் அல்லது கருத்து உங்கள் உள்ளத்தைத் தொடும்வரைக்கும் வேத பகுதியை மீண்டும் மீண்டும் வாசித்துக் கொண்டேயிருங்கள்.

**'என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன். அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்.' - நீதி 8:17** ❑

## இன்னுமொரு சீகன்பால்கு வரவேண்டுமா?

(திருமதி. ஹேமா தனசீலன், சென்னை)

கிறிஸ்துவை உனக்கு அறிவிக்க
சுடு மணலில் நின்று
தமிழ் பயின்றார் சீகன்பால்கு;
உன் கையிலுள்ள வேதாகமம்
வெளிநாட்டவர் தமிழ் கற்றதால் வந்தது;

கிறிஸ்துவை அறிந்துகொண்ட பின்
நீ ஆங்கில மேதையாகி விட்டாயா?
தமிழ் பேச மறந்து விட்டாயா?
அல்லது மறுத்து விட்டாயா?
உன் நாவில் தமிழ்ச் சொல் வராததால்
வேதவசனம் - ஏழைத் தமிழனைப் போய்ச்
சேராமல் போனதோ?

"உலகெங்கும்போய் சுவிசேஷம்
அறிவியுங்கள்" - இது இயேசு இட்ட
கட்டளை - உனக்கேன் தமிழ்மொழியில்
சுவிசேஷம் சொல்ல முடியவில்லை?

மொழிகள் பல கற்றுக்கொள்வதில்,
தவறில்லை - ஆனால்
உன் தாய்மொழியை மறந்து விடாதே!

ஏனெனில் முதலில் எருசலேமில்... ஆம்,
உன் தாய் மண்ணில் முதலாவதாய்
சுவிசேஷம் சொல்லவேண்டும்

அதற்கு நீ தமிழ் பேசவேண்டும்
தமிழில் வேதவசனம் சொல்லவேண்டும்
கைப்பிடி களிமண்ணைத்தான்
தன் கடவுளெனச் சொல்லி
கண் மூடித்தனமாய் அறியாமையில்
முடங்கி கிடக்கும் - பேதை
கிராமத்துத் தமிழர்களுக்கு
சுவிசேஷம் சொல்ல - இன்னுமொரு
சீகன்பால்கு வரவேண்டுமா?
இந்த தமிழர்களின் ஆத்தும கணக்கு
தமிழனான உன்னிடம் அல்லவா
கேட்கப்படும்!

ஆகையால்,
என்னருமை தமிழ் கிறிஸ்தவனே!
அன்பர் இயேசுவை
உன் தமிழ் நண்பனுக்கு
இன் தமிழில் அறிவித்திட
தமிழ் பேசு, தமிழா நீ தமிழ் பேசு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பிள்ளைகளே இந்த படத்தை அழகிய வர்ணங்களால் நிறந்தீட்டி மகிழுங்கள்.**



வேதாகமத்தை திருப்பாமல் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் (விடைகள் கீழே தரப்பட்டுள்ளன)

1. சாஸ்திரிகள் இயேசுவுக்கு கொண்டுவந்த பரிசு பொருட்கள் எவை?
2. மரியாளுக்கு புருஷனாக நியமிக்கப்பட்ட யோசேப்பின் தகப்பன் யார்?
3. மரியாள் எவ்வளவு காலம் எலிசபெத்தோடு தங்கியிருந்தாள்?
4. உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட கட்டளையிட்டது யார்?
5. தேவதூதன் தரிசனமானபோது மேய்ப்பர்கள் எங்கே இருந்தனர்?
6. தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்று கூறியது யார்?
7. எலிசபெத்தின் கணவன் பெயர் என்ன?
8. நட்சத்திரம் யாரை வழிநடத்தியது?

விடைகள்:

1. வெள்ளைப்போளம், பொன், தூபவர்க்கம்
2. யாக்கோபு
3. மூன்றுமாதம்
4. அகஸ்துராயன்
5. வயல்வெளி
6. தேவதூதன்
7. சகரியா
8. சாஸ்திரிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழைப்பு

'சுவிசேஷத்தினாலே... அவர் உங்களை அழைத்தார்' (2 தெசலோ 2:14)



"ஜொனி, ஜொனி" என அம்மா கூப்பிட்ட போது, தான் விளையாடிக் கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு வீட்டுக்கு வரும்படி அம்மா அழைக்கிறார் என ஜொனி நினைத்தான். எனவே, ஒரு மரத்துக்குப் பின்னால் ஒளிந்து பதில் கூறாமல் அமைதியாக இருந்தான்.

"ஜொனி, சீக்கிரம் வா" என அம்மா மீண்டும் அழைத்தார். அவனுடைய மாமா ஜொனியை கடற்கரைக்கு கூட்டிக்கொண்டு போவதற்காக அழைத்தார். ஆனால் அவர் அவசரமாக போகவேண்டியிருந்தது. ஜொனி உடனே பதில் சொல்லாமல் இருந்ததினால் அவன் அந்த அருமையான வாய்ப்பை இழந்து விட்டான். பின்னர் அதைப்பற்றி கேள்விப்பட்ட போது அவன் மிகவும் மனம் வருந்தினான்.

தேவன் எம்மை அழைக்கும்போது, நாம் அவருக்கு பதில் அளிக்காவிட்டால், கடற்கரைக்குப் போவதிலும் பார்க்க, அதிக மான காரியங்களை இழந்துவிடுவோம்.தேவன் எனக்குத் தர காத்திருக்கின்ற ஒவ்வொரு காரியங்களையும் இழந்துவிடுவோம். பாவ மன்னிப்பு, மகிழ்ச்சி, நல்வாழ்வு, பரலோகம் போன்றவை அவற்றில் சில.

தேவன் எப்படி மக்களை அழைக்கிறார்? பவுல் என்ற தேவபக்தன் "சுவிசேஷத்தினாலே அவர் உங்களை அழைத்தார்" என கூறுகிறார். அதாவது நம்முடைய போதகர்கள், ஆசிரியர் கள், பெற்றோர் போன்றவர்கள் நம்மை நோக்கி, "நாம் அவருடைய பிள்ளைகளாக அவருக்கு சாட்சியாக வாழவேண்டும்" என நமக்கு புத்திச் சொல்லும்போது, அவர்கள் மூலமாக கடவுள் நம்மோடு பேசி நம்மை அழைக்கிறார் என்று அர்த்தமாம்.

அதுமட்டுமல்ல அவர் நம்மை பெயர் சொல்லி அழைத்து, "எனக்குப் பிள்ளைகளாக இருங்கள். உங்களுக்காக நான் சிலுவையில் மரித்துவிட்டதினாலே, நான் உங்களை பாவங் களை மன்னிக்கிறேன். என்னோடு வாழ உங்க ளுக்கு பரலோகத்திலே வீடுண்டு. பூமியிலும் எனது அன்பை நீங்கள் சந்தோஷமாக அனுபவிக்க வேண்டுமென்று நான் விரும்பு கிறேன்" என்று கூறுகிறார்.

தேவன் இப்படி அழைக்கும்போது மக்கள் சந்தோஷத்தோடு அவரிடம் வந்து அவரோடு வாழ்வார்கள் என்று தானே நினைக் கிறீர்கள். இல்லை அநேகர் அவரை விட்டுப் பிரிந்து வாழத்தான் விரும்புகிறார்கள். அவர்கள் செய்ய விரும்பாத ஏதோ ஒன்றை அவர் செய்ய சொல்வார் அல்லது இயேசுவிடம் வந்து விட்டால், சிரித்து மகிழ்வதை எல்லாம் நிறுத்தி கொள்ளவேண்டும் என்று அவர்கள் நினைக்கி றார்கள். ஆனால் அவர்கள் தேவனைவிட்டுப் பிரிந்து வாழும்போது, அவர்கள் அனுபவிக்கக் கூடிய மேலான, நன்மையான காரியங்களை எல்லாம் அவர்கள் இழந்து விடுகிறார்கள். ஆம், தேவனுடைய அன்பையும் நட்பையும் இழந்து விடுகிறார்கள்.

எமக்கு தேவனுடைய அன்பும், அவரது மன்னிப்பும், அவருடைய எல்லாவித ஆசீர்வா தங்களும் நமக்குத் தேவை. நாம் அவரோடு வாழவேண்டும். அதனால்தான் அவர் சுவிசே ஷத்தின் மூலமாக அழைக்கும்போது நாம் அவரிடம் வருகிறோம். சுவிசேஷம் என்பது இயேசுவினுடைய சரித்திரம். நீங்கள் அவர ண்டை வந்துள்ளீர்களா? இல்லையென்றால் இன்றே அவரிடம் வந்து, அவரது ஆசீர்வாதங் களைப் பெற்றுக்கொள்ளும்படி ஜெபியுங்கள். ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று

- இ.இ.வஷ்னீ -

அது ஒரு அடர்ந்த மலைப்பிரதேசம். ஓங்கி வளர்ந்த மரங்களைக் கொண்டிருந்த காட்டில் மூன்று அழகிய மரங்கள் தமது எதிர்காலத்தைக் குறித்து தமது கனவுகளை அடக்கி வைத்துக்கொள்ள முடியாமல் தமக்குள் பகிர்ந்துகொண்டன.

முதலாவதாக பேசிய மரம், தன்னை மிகவும் மதிப்புள்ள கௌரவத்துக்குரிய மரமாக எண்ணிக் கொண்டது. அது சொன்னது, "நான் ஒரு அழகான பாதுகாப்பு ஆபரணப் பெட்டகமாக மாற ஆசைப்படுகிறேன். உலகிலுள்ள விலையுயர்ந்த பொக்கிஷங்களை கொண்டிருப்பேன். தங்கம், வைரம், முத்து, பவளம் போன்ற உயர் மதிப்புள்ள இரத்தினங்களை எனக்குள் கொண்டிருப்பேன்"

இரண்டாவது மரமோ, தான் உயிர்களைக் காக்கும் சாதனையாளராக மாற ஆசைப்பட்டது. அது சொன்னது, "நானோ ஒரு மாபெரும் கப்பலாக மாற விரும்புகிறேன். உலகிலுள்ள பெருந்தலைவர்கள் ராஜ குடும்பத்தினர், வியாபாரிகள், பயணிகளை பத்திரமாய் சுமந்து செல்லும் மாபெரும் கப்பலாக மாறுவேன்" என உறுதிபூண்டது.

மூன்றாவது மரம் தன்னைக்குறித்து எதைச் சொல்வதென தடுமாறியது. ஆயினும் மற்றவர்கள் தன்னை மதிக்கும்படி எனக்குள் எதுவுமே இல்லாவிட்டாலும் "நான் வானத்தை தொடுவேன். என்னைப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுமளவுக்கு நான் உயரமான மரமாக இருக்கவே ஆசைப்படுகிறேன்" என்றது.

மூன்று மரங்களும் தமது ஆசைகளை பகிர்ந்து கொண்டபின்பு அவற்றினை தமது ஜெபங்களாக மாற்றி பதிலுக்காக காத்தருந்தன. தாம் எண்ணியபடி நடக்குமோ, இறைவன் தமது ஜெபத்திற்கு நல்ல பதிலை தருவாரா? என்ற எதிர்பார்ப்பு அவற்றிற்குள். காலங்கள் சென்றன. மூன்று மரங்களும் அம் மலைப் பிரதேசத்திலேயே மிகவும் வயது முதிர்ந்த மரங்களாயின.

ஒருநாள் மரம்வெட்டுபவர் ஒருவர் அக்காட்டினுள் நுழைந்தார். பல மரங்களை பார்வையிட்ட அந்த மரம் வெட்டுபவர் முதலாவது மரத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அதனை வெட்டி தச்சனுக்கு விற்று நல்ல தொகையொன்றை சம்பாதிக்கலாம் என மனதிற்குள் எண்ணிக்கொண்டார். விலையுயர்ந்த மதிப்புக்குரிய பொருட்களை தன்னகத்தே கொண்டிருக்கவேண்டுமென ஆசைப்பட்ட மரம், தனது ஆசை நிறைவேறும் என்ற நம்பிக்கையில் வெட்டப்படும் வேதனையைச் சகித்துக் கொண்டே, அம் மாபெரும் மரம் மண்ணில் சரிந்தது.

மரம் வெட்டுபவர் இரண்டாவது மரத்தையும் கண்டு அதனை கப்பல்கட்டும் தன்னுடைய நண்பனுக்கு நல்ல விலைக்கு விற்றுவிடலாம் என்று வாய்விட்டு கூறியபடியே அந்தப் பெரிய மரத்தையும் வெட்ட ஆரம்பித்தார். தான் நினைத்திருந்தபடி தானொரு கப்பலாக உருமாறுவேன் என்ற மகிழ்ச்சியில் இரண்டாவது மரமும் வெட்டப்பட்டு கீழே விழுந்தது.

இம்மரத்தினால் என்ன பயன்? என்றபடியே மூன்றாம் மரத்திடம் வந்தார் மரம் வெட்டுபவர். இம்மரத்தினால் பயனில்லை. ஆயினும் இதனை இப்படியே விட்டுவிட்டால் இது வானத்தையும் தொட்டுவிடும். அதன்பின் இதனை வெட்டுவது மலைபாங்கான இப்பிரதேசத்தில் கடினம் என எண்ணியபடியே இதையும் யாராவது நல்ல விலைக்கு வாங்க வருவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் அதையும் வெட்டிவிட்டார்.

மாதங்கள் ஓடின. மூன்று மரங்களும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்தன. சில நாட்களின் பின் ஒரு தச்சனிடம் முதலாவது மரம் வந்து சேர்ந்தது. தச்சன் அம்மரம் விரும்பியபடி அதை நகை பொக்கிஷங்களை வைத்திருக்கும் பாதுகாப்புப் பெட்டியாக அல்ல. அதனை ஒரு மாட்டுத்தீவனப் பெட்டியாக உருமாற்றினான். அது தன் ஆசை நிறைவேறாததைக் கண்டு மிகுந்த கவலையுடன் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்கள் கடந்தபின் இரண்டாவது மரம், கப்பல்கட்டும் துறைமுகத்திற்குவந்து சேர்ந்தது. "தனது ஆசை நிறைவேறப் போகின்றது என்ற பெருமிதத்துடன் அங்கு சிலநாட்கள் அது பொறுமையோடு இருந்தது. கடைசியில் அது சீவப்பட்டு, ஆணிகளினால் அடிக்கப்பட்டு, பல இடங்களில் வெட்டப்பட்டு இறுதியில் கடலில் மிதக்கவிடப்பட்டது. ஆனாலும் அம் மரம் தான் விரும்பியபடி ஒரு கப்பலாக அல்ல ஒரு சாதாரண மீன்பிடி படகாகவே உருவாக்கப்பட்டது. தான் ஒரு மாபெரும் கப்பலாக மாறி கடலில் பயணிக்க ஆசைப் பட்ட அது சோகத்துடன் நீரில் மிதந்துக் கொண்டிருந்தது.

மூன்றாவது மரமோ, இன்னும் விலை போகா மல் மரம் வெட்டுபவனின் கூடத்தில் கவனிப்பாரின்றி ஒரு மூலையில் கிடந்தது. அதைத் திரும்பி பார்க்க ஒருவரு மில்லை.

ஒரு நாள் இரவு!

முதல்மரத்தினால் செய்யப்பட்டிருந்த தீவனப் பெட்டியிருந்த இடத்திற்கு ஒரு தம்பதிகள் வந்தனர். சத்திரத்தில் இடமில்லாமையினால் அங்கு வந்திருந்த பெண்மணி, தனக்கு பிரசவம் நேரிட்டு, குழந்தையை பெற்றெடுத்தபோது புதிதாய் பிறந்த அக் குழந்தையை படுக்கவைக்க கட்டிலோ, தொட்டிலோ இல்லாதபடியி னால் அந்த தீவனப் பெட்டியை எடுத்து அதனை சுத்தப் படுத்தி அக்குழந்தையை அங்கு கிடத்தினாள். அந்த இரவே தேவ தூதர்களின் துதிப்பாடல்கள் ஒலிக்க, விலையுயர்ந்த பரிசு பொருட்களுடனும் பல சிறிய, பெரிய மனிதர்கள் அவ்விடத்திற்கு வந்தபொழுது இக் குழந்தை ஒரு சாதாரண குழந்தையல்ல. மாறாக அது ஒரு தெய்வீக குழந்தை என்பதை அம்மரம் உணர்ந்து கொண்டது. உலகிலுள்ள பொன் வெள்ளியைவிட பெறுமதிமிக்கதும் விலைமதிக்கப்பட கூடாததுமான மாபெரும் பொக்கிஷத்தை தான் தாங்கிக்கொண்டிருப் பதனை உணர்ந்த அம்மரம் மகிழ்ச்சியினால் பெருமித மடைந்தது.

வருடங்கள் சில கடந்தன. இரண்டாவது மரத்தி னால் செய்யப்பட்டிருந்த படகு ஒரு மீனவனுக்குச் சொந்தமானது. ஒருநாள் ஒருசிறு குழுவினர் அப்படகில் அக்கரை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தனர். திடீரென காற்று வேகமாக வீச கடல் அலைகள் கொந்தளிக்கத் தொடங்கின. அப்பொழுது அப்படகு அங்குமிங்கும் தள்ளாடிக் கொண்டிருந்தது. அக்குழு வின் தலைவர் அப்படகு உடையக்கூடிய பகுதியில் தலைவைத்து நித்திரையாய் இருந்தார். அவர் மிகுந்த களைப்புடன் தூங்கிக்கொண்டிருந்தபோது மற்றவர்கள் அவரைத் தட்டியெழுப்பினார்கள். அவர் விழித்தெழுந்து, காற்றையும் கடலையும் நோக்கி "அமைதியாயிரு" எனக் கட்டளையிட்டார். உடனே காற்றும் கடலும் அமைதியானது. உலகையே படைத்து காப்பாற்றி பராமரித்து வருகின்ற ராஜாதி ராஜா தனது படகில் பயணம் செய்கிறார் என்பதை அறிந்துகொண்ட அம்மரம் அவரை சுமந்தபடியே பெரும் மகிழ்ச்சியில் அமைதியுடன் பயணித்தது.

சில ஆண்டுகள் சென்றதும் யாருக்கும் உத வாது எனக் கணிக்கப்பட்ட அந்த மூன்றாவது மரம் அரசாங்க சொத்தானது. அது குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுக்கும் ஒரு சிலுவையாக உருமாற்ற மடைந்தது. ஒருநாள் அச்சிலுவை ஒருவருடைய தோளின்மேல் சுமத்தப்பட்டது. குற்றவாளியாக தீர்க்கப்பட்ட அவருடைய முகத்தை பார்த்தபோது, அவர் ஒரு குற்றமும் செய்திராத நல்லவரைப்போல் காணப்பட்டார். அவர்கள் கொல்கொதா என்ற இடத்தி ற்கு வந்ததும் அங்கு அவரை அந்த சிலுவையில் அறைந்தார்கள். சற்று நேரத்தில் எங்கும் காரிருள் பரவியது. சிலுவையில் தொங்கியவர் உயிரை விட்ட போது அவர் தெய்வம் மட்டுமல்ல ராஜாதிராஜா என்றும் அவர் மனித குலத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கும்படி வந்த தேவனுடைய ஆட்டுக்குட்டியானவர் என்பதையும் அந்த மரம் அறிந்து மனம் நெகிழ்ந்தது. மற்றவர்களின் பாவத்திற்காக தன்மீது உயிரை தியாகம் செய்த அவர் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார் என்பதை கேள்விப்பட்ட அச்சிலுவைமரம் ஆச்சரியப் பட்டது.

அம் மூன்று மரங்களின் முடிவுகள், அவை செய்த ஜெபங்களுக்கு கொடுக்கப்பட்ட பதிலாகவே அமைந்திருந்தன. ஆனால் அவை விரும்பியபடி அப் பதில்கள் அமையவில்லை. எதிர்காலத்தைக் குறித்து திட்டமிட்டு தமது ஆசைகளை கனவுகளை ஜெபமாக ஏறெடுத்த அம்மரங்களின் முடிவுகள் ஆண்டவரின் சித்தப்படியே சிறப்பாக அமைந்தன.

உங்களுடைய வாழ்க்கையில் ஜெபங்கள் விருப்பங்கள் ஆசைகள் நிறைவேறாதபோது சோர்ந்து போகாதிருங்கள். உங்களுடைய வாழ்க்கைக்கு சிறந் தது எது என்பது ஆண்டவருக்குத் தெரியும். நீங்கள் விரும்பியபடி உங்களுடைய வாழ்க்கையில் எதுவுமே நடக்காதபோதும் ஆண்டவருடைய சித்தப்படியே சகல மும் நடக்கும். அது உங்களுக்கு எப்பொழுதும் நன்மை யையே கொண்டுவரும் என்பதை உணர்ந்து உற்சாக மடையுங்கள். ❑

**பாவத்தின் போனஸ்**

ஒரு பேருந்து நிலையத்தில் அனைவரும் வாசிக்கத் தக்கதாக "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று ஒரு சபையினால் எழுதி வைக்கப்பட்டிருந்தது. ஒருநாள், இரவில் சில குறும்புக்காரர்கள், "பாவத்தின் சம்பளம் மரணம் என்றால், போனஸ் உண்டா?" என்று எழுதிவிட்டுச் சென்றனர். அவ்வழியாக வந்த ஒரு முதியவர், அதை வாசித்துவிட்டு "ஆம், பாவத்தின் போனஸ் அக்கினியும், கந்தகமும்" என்று அருகில் எழுதும்படி கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலமென்னும் கடலினிலே வாழ்க்கைப் படகு!

- சுதா -

காலமென்னும் கடலினிலே, கடந்தகாலம் நிகழ் காலம் வருங்காலம் என இம்மூன்று கட்டங்களை மனிதன் சந்திக்கின்றான். இந்தக் கடலினிலே அவனது வாழ்க்கையென்னும் படகு சந்திக்கும் பிரச்சினைகள் தான் எத்தனையெத்தனை!

கடந்த காலத்தை எண்ணி வருந்துவோர் பலர். அதை எண்ணி மகிழுவோர் சிலர். ஒருவனது வாழ்க்கையில் அழுகை, இன்னொருவனின் வாழ்க்கையில் இனிமை. இது உண்மையிலேயே காலத்தின் கோலம் தானே?

நிகழ்காலத்தை எடுத்துக்கொண்டால், அது சீக்கிரம் கடந்து போய்விடவேண்டும் என்றெண்ணுவோர் பலர். அது போய்விடக்கூடாது என்றெண்ணுவோர் சிலர். ஒருவனுக்கு கவலை. மற்றவனுக்கு இன்பம்! இதுவும் காலத்தின் விளையாட்டுதானே?

வருங்காலம்! இது வரவேண்டும் என எதிர்பார்ப்பார் பலர்! வரகூடாதென்பார் சிலர். இது நிகழ்காலத்தின் மறு தாக்கம். வேண்டாம் என்பவன் இன்பத்தில் சஞ்சரிக்கிறான். வேண்டுமென்பவன் கவலையில் ஆழ்ந்திருக்கிறான். இதையும் அதே கோலம் என்றுதான் அழைக்கின்றோமா?

கடலையும் படகையும் முறையே காலத்திற்கும், வாழ்க்கைக்கும் ஒப்பிட்டோம். அதாவது, காலத்திற்கு கரையுண்டு. வரையுமுண்டு. அதாவது வாழ்வுக்கு ஒரு தொடக்கமும் முடிவும் உண்டு. எனவே கரையிலிருந்த படகு நகர்ந்து செல்லுகின்றது. என்ன மடத்தனம்! படகை அவிழ்த்து கடலில் விட்டால், அது தானாகவே நகர்ந்து சென்றுவிடுமா? அதற்கு திக்கும் திசையும் தெரியாதே! எங்குபோய் என்னதான் செய்யும்? கடலில் கொந்தளிப்புண்டு, புயலுண்டு. அதையெல்லாம் எதிர்த்து கட்டுப்படுத்த முடியாமல் புரண்டு மூழ்கி படகானது அழிந்துவிடாதா?

அதுதானே! நமது வாழ்க்கை வெறும்படகு என்பது இப்போதல்லவா புரிகிறது! காலத்தின் மேல் குற்றத்தை சுமத்திவிட்டு, அதனையல்லவா குறைகூறிக்கொண்டு இருக்கிறோம்! கடலின் கொந்தளிப்புக்குமுன், படகு வெறும் துரும்பாயிற்றே! அப்படியே கடல்தான் அமைதி பெற்றுவிடும் என நம்பி படகு தனியே முன்னேறிவிட முடியுமா? கடலைப் படைத்தது யார்? படகைப் படைத்தது யார்?

கடலைப் படைத்தது வேறு எந்த சக்தியுமல்ல. அது தேவன்தான்! ஆனால் படகைப் படைத்தது யார்? தேவனால் படைக்கப்பட்ட மனிதன்! ஆதியில் தன் தூய தேவசாயலை மாசுபடுத்தி, நித்தியமற்ற ஒரு நிலையை, தானாகவே ஏற்படுத்திக் கொண்டுவிட்டான் அவன். தேவனின் கிரியையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வெறும் தூசியான மனிதன், அவரில்லாமல் இயங்க வேண்டுமென்றால் அது முடிகின்ற காரியமா?

காலங்களையும் முக்காலங்களையும் ஆளுபவர் தேவன்! வாழ்க்கை முழுவதையும் அனுபவிப்பவன் மனிதன்! கடலிலே, படகு தனியாய் இயங்கிச் செல்ல முடியாதது போலவே, ஓடிக்கொண்டேயிருக்கும் காலத்தில், நமது வாழ்க்கை தனியாக இயங்கிச் செல்ல முடியாது. காலத்தை தம் கரத்தில் வைத்துக்கொண்டிருக்கும் ஆண்டவர், நமது வாழ்க்கையையும் அவரே பிடித்து வைத்திருக்கிறார். ஆக இரண்டுமே அவரது சித்தப்படியே நடக்கிறது. அவருடைய சித்தத்திலேயே தங்கியிருக்கிறது. கடலிலே படகு முன்னேறிச் செல்ல வேண்டுமானால் ஒரு படகோட்டி தேவை! அது உண்மையென்றால், நமது வாழ்க்கையென்னும் படகை ஆண்டு நகர்த்திச் செல்லும் பொறுப்பு இயேசு என்னும் படகோட்டிக்கே உரியதாகவேண்டும் அல்லவா?

கடல், படகு, படகோட்டி! இதுதான் ஒரு கடல் பிரயாணத்தின் மூன்று முக்கிய அம்சங்களாக இருக்கின்றன. ஆகவே காலம், வாழ்க்கை, இயேசு இம் மூன்றும் நம்முடைய மூன்று முக்கிய அம்சங்களாக இருக்கின்றன. அப்படி இருக்கவேண்டும். படகோட்டியான இயேசுவின் ஆளுகைக்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்கும் போது நமது கடந்தகால வாழ்க்கைக்கும், நிகழ்கால வாழ்க்கைக்கும், வருங்கால வாழ்க்கைக்கும் அவரே பொறுப்பாளியாகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த கால பாவங்களை மன்னிக்கிறார்! நிகழ் கால வாழ்வினை ஆசீர்வதிக்கிறார்! வருங்காலத்தில் நல்ல பலனை அளிப்பார்! காரணம், அவர் காலத்தை தம் கையில் பிடித்துக்கொண்டிருக்கிறார்.

அவர் ஆதிமுதல் இருந்தார். இப்போதும் நம்மோடு இருக்கிறார்! இனியும் நமக்காக இருப்பார்! காலங்கள் உருவாகுமுன்னேயே தான் இருந்ததாகக் கூறினார்; சகல காலங்களிலும் நம்மோடு இருப்பதாக கூறினார். இனி காலத்தை குறித்து நியாயந்தீர்க்கும் நீதிபதியாக தாம் இருக்கப் போவதாகவும் கூறியுள்ளார்.

ஆதியில் பாவம் செய்த மனிதனுக்காக இந்த மண்ணிலே வந்து பிறந்து, நம் பாவத்தை தன் இரத்தத்தால் கழுவும்படியாக மரித்த அவர், அதை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளுகிற தம் மக்களுடைய வாழ்க்கையை ஆசீர்வதிக்கிறார். இனி நாம் இவ்வுலகில் செய்த கிரியைக்குத்தக்கதாக நல்ல பலனளிக்க அவர் காத்திருக்கிறார்.

இந்த நிச்சயத்தை அறிந்தவன் ஒருபொழுதும் காலத்தைக் குற்றப்படுத்தமாட்டான்! கடந்தகாலப் பாவங்கள் இயேசுவால் மன்னிக்கப்பட்டு விட்டமையினால், அவன் என்றும் மகிழ்ச்சியடைகின்றான். நிகழ் காலமும் அவர் கையிலேயே ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பதால் மகிழ்ச்சியால் நிறைகிறான். இனி வருங்காலமும் அவர் மூலமாய்க் கிடைக்கப் போவதால் மகிழ்ச்சி நிறைந்து வாழ்வில் நம்பிக்கை கொள்கிறான்.

காலத்தின கோலத்தில் மனிதன் அழிந்துவிடப் போவதில்லை. காலத்தை தன் கையில் வைத்திருக்கும் அவரை மறந்துவிடுபவனே அழிவுக்குள்ளாவான். எனவே கடந்த காலத்தைப் பற்றி எண்ணிக்கொண்டிராதே! கவலைப்படாதே! உன் கடந்தகால நிகழ்ச்சியை ஆண்டவர் இயேசுவிடம் வந்து ஒப்புவி! நிகழ்கால துன்பத்திலே தளர்ந்துவிடாதே! அதையும் ஆண்டவரது சமுகத்தண்டை கொண்டுவா! வருங்காலத்தைக் குறித்த திகிலும் கலக்கமும் உனக்கு வேண்டாம்! ஆண்டவர் இயேசுவிடம் இன்றேவா!

காலத்தைத் தள்ளிப் போடாதே! அது வேகமாக ஓடிக்கொண்டிருப்பது உண்மை! "...இப்பொழுதே அநுக்கிரககாலம்; இப்பொழுதே இரட்சணிய நாள்" (2கொரி.6:2). எனவே இப்பொழுதே ஆண்டவர் அநுக்கிரகஞ்செய்யும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்! இன்றே "காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்"(கொலோ.4:5). ஏனென்றால், "காலம் சமீபமாயிருக்கிறது"(வெளி.1:3). இன்றோ, நாளையோ, உன் உயிர் இருப்பது நிச்சயமல்ல! எந்த நிமிஷத்தில் உன் படகு கவிழுமோ தெரியாது! ஓராண்டு முடிகிறது, இன்னொரு ஆண்டு வருகின்றது! காலங்கள் கழிகின்றன! ஆனால் உன் நிலை என்ன?

இயேசு என்னும் படகோட்டி உன்னை ஆண்டு வழிநடத்திச் செல்வாரானால் காலமென்னும் கடலிலே உன் வாழ்க்கையென்னும் படகு, சலனமின்றி போய்க் கொண்டிருக்கும்! நீ எதிர்நோக்கப்போகும் கொந்தளிப்புக்களை அவரே அமர்த்த வல்லவராயிருக்கிறார்! எந்த சக்திகளும் அவருக்கு முன்னால் அடங்கியே தீர வேண்டும். மலந்துவிட்ட இந்த புதுநாளில் புதியவனாய் மாறி, அந்த படகோட்டியை நம்பி உன் பயணத்தை ஆரம்பிப்பாயா?

**'காலத்தின் கோலத்தில் அகப்பட்டுள்ள மனிதன் அழிந்துவிடப் போவதில்லை. காலத்தை தன் கரத்தில் வைத்திருப்பவரை மறப்பவனே அழிவுக்குள்ளாவான்.'** ❑

## நீ மட்டும் கேட்கலாமோ?

"சிரோ, இங்கே வா!"
"என்னம்மா?"
"பக்கத்துவீட்டு ரெபேக்கா அக்காவிடம் பிஸ்கட் வேணும்னு கேட்டியா?"
"ஆமாம்!"
"மற்றவங்ககிட்ட ஒண்ணும் கேட்கப்படாது. உனக்கு என்ன தேவையோ, அதை 'ஜெபம் பண்ணி ஆண்டவர்ட்ட கேக்கணும்' என்னு சொல்லியிருக்கேன்ல?"
"ஆமாம், எனக்கும் ரெபேக்கா அக்காட்ட பிஸ்கட் கேட்க அவமானமாகதான் இருந்தது"
"பின்பு ஏன் கேட்டாய்? அப்பாவும் அம்மாவும் வாங்கித்தர மாட்டோமா? எங்களிடம் கேட்க வேண்டியதுதானே?" "நீங்க மட்டும் மற்றவங்கட்ட கேட்கலாமா?"
"நீ என்னடா சொல்றாய்?"
"போன ஞாயிற்றுக்கிழமை அண்ணனுக்கு பெண் பார்க்க போயிருந்த வீட்டில், நமக்கு முன்பின் தெரியாத மற்றவங்க வீட்டில், நீ என்னென்னமோ கேட்டாய்? அண்ணனுக்கு தேவையென, பைக், கோட், சூட், ஒரு பெரிய வீடு என்று எல்லாவற்றுக்கும் சேர்த்து ஆயிரக்கணக்கில் ரூபாயாகக் கேட்டாயே... ரெபேக்கா அக்கா மாதிரி நமக்கு கொஞ்சம்கூட பழக்கம் இல்லாத அவங்களிடம் நீ மட்டும் கேட்கலாமா? எனக்கே ஒருமாதிரி இருந்தது. அப்ப அண்ணனுக்கு எப்படி இருந்திருக்கும்?"
"பளீச்.." என்று அவள் சொன்ன பதிலைக் கேட்டு அம்மா வாயடைத்துப் போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏதேன்!!



## "..ஏற்ற துணையை...உண்டாக்குவேன்..."
## (ஆதியாகமம் 2:18)

**எம்முடன் தொடர்பு கொள்ளுமுன்னர் இவ் அறிவுறுத்தல்களை கவனத்திற் கொள்ளவும்:**

🔔 இந்த திருமணச் சேவைக்கு கிறிஸ்தவர்கள் மட்டுமே விண்ணப்பங்கள் அனுப்பிவைக்க எதிர்பார்க்கப்படுகின்றனர்.

🔔 விபரங்களை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்புங்கள். தெளிவற்ற அல்லது தேவையான விபரங்கள் தரப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சொத்து, சீதனம், குலம் பற்றிய விபரங்கள் அதில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

🔔 உங்களுடன் தொடர்புகொள்ள, உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண் அல்லது மின்அஞ்சல் முகவரி மற்றும் தொடர்புகொள்ளவேண்டிய நபரின் பெயர் என்பனவற்றை எழுதி அனுப்புங்கள். தொடர்புகொள்ளவேண்டிய நபராக - பிள்ளையின் பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள், அல்லது உங்கள் சபை போதகரின் பெயரை குறிப்பிட்டு அனுப்பலாம். (எக்காரணம் கொண்டும் சத்தியவசன ஊழியர்களின் பெயரை தொடர்பு கொள்ளவேண்டிய நபர்களாக குறிப்பிடவேண்டாம்)

🔔 தயவுசெய்து உங்கள் விபரங்களுக்கு "மணமகன் விபரம்" அல்லது "மணமகள் விபரம்" என உரிய தலைப்பிட்டு அனுப்பிவையுங்கள். தலைப்பிடப்படாத விபரங்கள் நிராகரிக்கப்படும்.

🔔 ஒரே தாளில் பலரது விபரங்களை எழுதியனுப்புவதை தவிர்த்து, ஒரு தாளில் ஒருவரின் விபரங்களை மாத்திரம் எழுதியனுப்பவும்.

🔔 உங்கள் விபரங்களை அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்க விரும்புகிறவர்கள் தயவுசெய்து, விபரங்களை பெப்ரவரி மாதம் 15ம் திகதிக்கு முன் எமக்கு வந்து கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும். தாமதமாக கிடைக்கும் விபரங்கள் அடுத்த சஞ்சிகையில் சேர்த்துக் கொள்ளப்படும்.

🔔 இச்சேவைக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. இது சேவை நோக்கத்துடன், உங்கள் நன்மைக்காகவே செய்யப்படுகிறது.

விபரங்களை அனுப்பவேண்டிய முகவரி: **"ஏதேன்" த.பெ.1012, கொழும்பு, இலங்கை.**

ஏதேன் பகுதியில் ஏற்கனவே வெளியான விபரங்களை மறுபடியும் பிரசுரிக்க விரும்புகிறவர்கள், **மீள் பிரசுரம்** என தலைப்பிட்டு, கடந்தமுறை வெளியான **இலக்கத்தையும்** குறிப்பிட்டு விபரங்களை அனுப்பிவைக்கலாம்.

**கவனிக்க..**

🔔 இம்முறை ஏதேன் பகுதியில் பிரசுரமான தகவல்களின் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் "விபரம் தேவை" எனத் தலைப்பிட்டு, விபரம் தேவைப்படும் இலக்கத்துடன் உங்கள் பெயர், முகவரியை மாத்திரம் எழுதி எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.


🔔 தொலைபேசியில் தொடர்புகொண்டு விபரங்களைப் பெறமுடியாது.

🔔 இப் பகுதியில் வெளியாகும் நபர்களைப்பற்றியோ அல்லது கொடுக்கப்படும் விபரங்களின் உண்மைத்தன்மை குறித்தோ சத்தியவசனம் உறுதிப்படுத்தவோ பொறுப்பேற்கவோ மாட்டாது. இதன் மூலம் பிரச்சனைகள் ஏதும் எழுமாயின் அதற்கு சத்தியவசன ஊழியர்களோ சத்தியவசன ஊழியமோ எந்தவிதத்திலும் பொறுப்பேற்கமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொள்ளுமுன்னர். முன் பக்கத்திலுள்ள அறிவுறுத்தல்களை வாசிக்கவும்



# மணமகள் விபரம்

(இல F2007-1201) வயது 30, C.P.M சபையைச் சேர்ந்த மணமகளுக்கு, இரட்சிக்கப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (நீர்கொழும்பு).

(இல F2007-1202) வயது 39, உயரம் 5'5" இங்கிலாந்து குடியுரிமைபெற்று தொழில்புரியும் இரட்சிக்கப்பட்ட மணமகளுக்கு, இரட்சிக்கப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (இங்கிலாந்து)

(இல F2007-1203) வயது 45, உயரம் 5'8". பொதுநிறம். A.O.G சபை. தையல், சபை ஊழியங்களில் ஈடுபாடுடைய மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். துணை இழந்தவர்களும் பரவாயில்லை. (கல்கிஸ்சை).

(இல F2007-1204) வயது 41, உயரம் 5'2". பொதுநிறம். அங்கிலிக்கன் சபை. நன்கு படித்து தொழில்புரியும், சபை ஊழியங்களில் ஈடுபாடுடைய மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். (கல்கிஸ்சை).

(இல F2007-1205) வயது 35, உயரம் 5'4". பொதுநிறம். மெதடிஸ்த திருச்சபை. மும்மொழிகளும் பேசக்கூடிய அரசாங்க திணைக்களத்தில் லிகிதராக பணிபுரியும் மணமகளுக்கு கிறிஸ்தவ மணமகனைத் தேடுகின்றனர். (தெகிவளை).

(இல F2007-1206) வயது 35, பொதுநிறம். R.C சபை. க.பொ.த(சா/த) கற்று தையல் தொழில்புரியும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 5).

(இல F2007-1207) வயது 25, உயரம் 5'3". பொதுநிறம். க.பொ.த (சா/த) கற்று மும்மொழிகளும் தெரிந்த computer Desgning கற்றுள்ள ஆலய ஊழியம் செய்யும் மாதவருமானம் 7000/= பெறும் குடும்ப பாங்கான மணமகளுக்கு கடவுள் பக்தியுள்ள இரட்சிக்கப்பட்ட நிரந்தர தொழில்புரியும் மணமகனைத் தேடுகின்றனர். ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம். (கொழும்பு 15).

(இல F2007-1208) வயது குறிப்பிடப்படவில்லை. உயரம் 5'1" அங்கிலிக்கன் திருச்சபை. க.பொ.த (சா/த) கற்று அச்சுக்கூடமொன்றில் தொழில்புரியும் மணமகளுக்கு நல்லொழுக்கமுள்ள மணமகனைத் தேடுகின்றனர். (யாழ்ப்பாணம்).

(இல F2007-1209) வயது 37, பொதுநிறம். R.C சபை. க.பொ.த (உ/த) கற்று வங்கியில் பணிபுரியும், விவாகரத்துபெற்ற குழந்தைகள் அற்ற மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 15).

(இல F2007-1210) வயது 36, க.பொ.த (உ/த) கற்று தனியார் வங்கியில் பணிபுரியும் மணமகளுக்கு, தகுந்த மணமகனை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ தேடுகின்றனர்.

(இல F2007-1211) வயது 33, உயரம் 5'5". பொதுநிறம். அங்கிலிக்கன் சபை. தனியார் பாடசாலை ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (மொரட்டுவ).

(இல F2007-1212) வயது 30, உயரம் 5'5". R.C சபை. ஆசிரியையாக பணிபுரியும், மணமகளுக்கு, உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ நிரந்தர தொழில்புரியும் மணமக்னைத் தேடுகின்றனர் (யாழ்ப்பாணம்).

(இல F2007-1213) வயது 34. அங்கிலிக்கன். கணவனையிழந்த மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர்(கொழும்பு 10).

(இல F2007-1214) வயது 25, உயரம் 5'3". க.பொ.த(உ/த), computer கற்ற தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் இரட்சிக்கப்பட்ட மணமகளுக்கு, தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். (றாகம).

(இல F2007-1215) வயது 35, A.O.G சபை. க.பொ.த(சா/த) கற்று முழுநேர ஊழியம் செய்யும் மணமகளுக்கு, தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். (கேகாலை).

(இல F2007-1216) வயது 30, உயரம் 4'11". சிவந்த நிறம். அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த, க.பொ.த(உ/த) கற்று தோட்ட வைத்திய அதிகாரியாக பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (உடபுலத்கம).

(இல F2007-1217) வயது 24, உயரம் 4'8". R.C சபை. தனியார் நிறுவனத்தில் லிகிதராக பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (புவக்பிட்டிய).

(இல F2007-1218) வயது 32, உயரம் 5'3". பொதுநிறம். C.P.M சபை. திறந்த பல்கலைக்கழகத்தில் பயின்று செயலாளராக கடமைபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

(இல F2007-1219) வயது 25, A.O.G சபை. க.பொ.த(சா/த) கற்று தற்போது தையல் கற்றுக்கொண்டிருக்கும் மணமகளுக்கு இரட்சிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகமுள்ள 30 வயதிற்குட்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (கோட்டைக்கல்லாறு).

(இல F2007-1220) வயது 27, மாநிறம். உயரம் 5'1". சிங்கள மொழிமூலம் பயின்ற கைத்தொழில் புரியும் மணமகளுக்கு, கிறிஸ்தவ மணவாளனைத் தேடுகின்றனர். (றாகம).

(இல F2007-1221) வயது 26, உயரம் 5'6". பொதுநிறம். பெந்தேகோஸ்தே சபையைச் சேர்ந்த தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகளுக்கு இரட்சிக்கப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (கனடா).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இல F2007-1222) வயது 41, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட இரட்சிக்கப்பட்ட நல்ல குணமுடைய அரசாங்க பாடசாலை ஆசிரியரான மணமகளுக்கு, நற்பண்புடைய தெய்வபக்திமிக்க மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு).

(இல F2007-1223) வயது 33, அங்கிலிக்கன் சபை. கொழும்பில் பணிபுரியும் பட்டதாரி மணமகளுக்கு பொருத்தமான மணமகனைத் தேடுகின்றனர். (கொச்சிக்கடை).

(இல F2007-1224) வயது 25, இரட்சிக்கப்பட்ட இளம் விசுவாசி. பொதுநிறம். R.C சபை. க.பொ.த(உ/த) கற்று தொண்டர் ஆசிரியராக பணிபுரியும் மணமகளுக்கு, கர்த்தருக்குப் பயந்த இரட்சிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த மணமகனைத் தேடுகின்றனர். (புத்தளம்).

(இல F2007-1225) வயது 31, உயரம் 5'. R.C சபை. பொதுநிறம். க.பொ.த(உ/த) கற்று தனியார் நிறுவனத்தில் கடமை யாற்றும் மணமகளுக்கு, அரசாங்கத்தில் பணிபுரியும் நற்பண்புள்ள மணமகனைத் தேடுகின்றனர். (மட்டக்களப்பு).

(இல F2007-1226) வயது 52, உயரம் 5'3". A.O.G சபை. பொதுநிறம். இளமை தோற்றம். இரட்சிக்கப்பட்ட விதவை. பிள்ளைகள் இல்லை. கடையில் காசாளராக பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர் (தெகிவளை).

(இல F2007-1227) வயது 29, உயரம் 5'2". சிவந்தநிறம். அங்கிலிக்கன் சபை. தனியார் நிறுவனத்தில் Executive Manager ராக தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (ஹட்டன்).

(இல F2007-1228) வயது 31, D.R.C சபையைச் சேர்ந்த மணமகளுக்கு, கிறிஸ்தவ மணமகனைத் தேடுகின்றனர். (பேலியகொடை).

(இல F2007-1229) வயது 30, A.O.G சபை. சிவந்த மெலிந்த தையல் கலை கற்ற மணமகளுக்கு, தகுந்த வரன் தேவை. (பண்டாரவளை).

(இல F2007-1230) வயது 49, உயரம் 5'2". அங்கிலிக்கன் திருச்சபை. கொழும்பை பிறப்பிடமாக கொண்டு, தையல் தொழில் புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொஸ்வத்தை).

(இல F2007-1231) வயது 35, உயரம் 5'4". பொதுநிறம். எக்கவுண்டராக பணிபுரியும் விவாகரத்து பெற்ற மண மகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். A.O.G சபையைச் சேர்ந்த, கிறிஸ்துவுக்கு சேவை செய்பவர் விரும்பத்தக்கது. (ராகம).

(இல F2007-1232) வயது 33, உயரம் 5'4". A.O.G சபை. தனியார் நிறுவனத்தில் Computer Operator ராக பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். (ஹோமாகமை).

(இல F2007-1233) வயது 25, உயரம் 5'. A.O.G சபை. தையல் நிறுவனமொன்றில் தொழில்புரிந்து நல்ல வருமானம் பெறும் மணமகளுக்கு, இரட்சிக்கப்பட்ட தொழில்புரியும் மணமகனைத் தேடுகின்றனர். (வட்டவளை).

(இல F2007-1234) வயது 35, உயரம் 4'10". பொதுநிறம். க.பொ.த(சா/த) கற்று தையல் தொழில்புரியும் இரட்சிக்கப்பட்ட மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (திருகோணமலை).

(இல F2007-1235) வயது 37, அப்போஸ்தல இவாஞ்சலிக்கல் சபை. சிவந்த நிறம். பயிற்றப்பட்ட ஆசிரியையாக தொழில் புரியும் மணமகளுக்கு மலையக அல்லது கொழும்பைச் சேர்ந்த ஊழியத்தில் ஆர்வமுள்ள மணமகனைத் தேடுகின்றனர். (இரத்தினபுரி).

(இல F2007-1236) வயது 37, உயரம் 5'2". பொதுநிறம். மெதடிஸ்த சபை. க.பொ.த(உ/த) கற்று, Sales Assistant ஆக பணி புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (மாளிகாவத்தை).

(இல F2007-1237) வயது 19, உயரம் 5". சீயோன் சபைக்குச் செல்லும் க.பொ.த(உ/த) கற்ற சிவந்தமேனியுடைய இரட்சிக்கப்பட்ட மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். வெளிநாடு விரும்பத்தக்கது. (சண்டிலிப்பாய்).

(இல F2007-1238) வயது 30, ஜீவ வசன சபை. சிவந்த நிறம். க.பொ.த(சா/த) கற்று ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியையான மணமகளுக்கு, 35 வயதிற்குட்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (வாழைச்சேனை).

(இல F2007-1239) வயது 21, உயரம் 5'. பொதுநிறம். மெதடிஸ்ட் மொன்டசூரியில் பணிபுரியும் ஹட்டனை பிறப்பிடமாக கொண்ட பெற்றோரை இழந்த மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். வெளிநாடு விரும்பத்தக்கது. (டவுன்ஹோல்).

(இல F2007-1240) வயது 23, உயரம் 5'. கல்வாரி சபை. பொதுநிறம். தையல் தொழில்புரியும் இரட்சிக்கப்பட்ட மணமகளுக்கு இரட்சிக்கப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (டவுன்ஹோல்).

(இல F2007-1241) வயது 23, உயரம் 4'11.5". அங்கிலிக்கன். சிவந்த அழகிய தோற்றம். சுண்டுக்குழியை பிறப்பிடமாக கொண்ட க.பொ.த(உ/த) கற்ற, கிறிஸ்தவ ஊழிய ஸ்தாபனத்தில் செயலாளராக பணிபுரியும் மணமகளுக்கு 27 வயதிற்குட் பட்ட நல்ல தொழில் புரியும் இரட்சிக்கப்பட்ட தெய்வபக்தியுள்ள மணமகனைத் தேடுகின்றனர். (தெகிவளை).

(இல F2007-1242) வயது 31, உயரம் 5'3". சிவந்த நிறம். பெட்டிஸ்ட் சபை. க.பொ.த(சா/த), கற்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 5).

(இல F2007-1243) வயது 41, உயரம் 4'10". சிவந்த நிறம். பெட்டிஸ்ட் சபை. க.பொ.த(சா/த), கற்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 15).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இல F2007-1244) வயது 46, உயரம் 5'3". அங்கிலிக்கன். பொதுநிறம். க.பொ.த(சா/த) கற்று காசாளராக பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 7).

(இல F2007-1245) வயது 32, உயரம் 5'1". பொதுநிறம். க.பொ.த(உ/த) கற்று தனியார் நிறுவனத்தில் திட்ட இணைப்பாள ராகவும் திறந்த பல்கலைக்கழக கலைப்பிரிவில் படிக்கும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (மட்டக்களப்பு).

(இல F2007-1246) வயது 26, உயரம் 5'5". R.C சபை. பொதுநிறம். க.பொ.த(உ/த) கற்று Customer Support Cordinotor ராக பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 10).

(இல F2007-1247) வயது 37, உயரம் 5'. அகாபே சபை. பொதுநிறம். சாதாரண வசதியுள்ள குடும்பத்ததைச் சேர்ந்த மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (நுகேகொடை).



## மணமகன் விபரம்

(இல M2007-1101) வயது 29, உயரம் 5'5". நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மாதம் 25,000/= பெறும் மணமகனுக்கு, கடவுள் பக்தியுள்ள ஒழுக்கமான மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 15)

(இல M2007-1102) வயது 24, உயரம் 5'7". தீயபழக்கமற்ற அரசாங்க காரியாலயத்தில் பணிபுரியும் computer தேர்ச்சி பெற்ற இரட்சிக்கப்பட்ட மணமகனுக்கு, சிவந்த மெல்லிய Computer Diploma or Teaching வேலை அனுபவமுள்ள தேவனுக்கு கீழ்ப்படிந்த அழகிய மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு).

(இல M2007-1103) வயது 32, உயரம் 5'8". R.C சபை. பட்டதாரி. கலாச்சார உத்தியோகஸ்தராக பணிபுரியும் மணமகனுக்கு, நிரந்தர தொழில்புரியும் மணமகளைத் தேடுகின்றனர். (யாழ்ப்பாணம்).

(இல M2007-1104) வயது 28, உயரம் 5'5". இரட்சிக்கப்பட்ட மணமகனுக்கு மும்மொழி தெரிந்த க.பொ.த(உ/த) கற்ற முழு நேர ஊழியரான தீய பழக்கமற்ற நல்லொழுக்கமுள்ள கடவுள் பக்தியுள்ள Computer Graphic Designing திறமைசாலியான மணமகளைத் தேடுகின்றனர். தொழில் செய்பவர் விரும்பத்தக்கது. (கொழும்பு 15).

(இல M2007-1105) வயது 31, அங்கிலிக்கன். சபை மூப்பராகவும் ஆராதனை நடத்துபவராகவும் தனியார் வங்கியில் பணி புரியும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (வத்தளை).

(இல M2007-1106) வயது 33, உயரம் 5'6". Electronic Engineer. இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவ மணமகனுக்கு, 30 வயதிற்குட் பட்ட இரட்சிக்கப்பட்ட மணமகளைத் தேடுகின்றனர். (திருகோணமலை)

(இல M2007-1107) வயது 32, R.C சபை. ஊடக தொடர்பாளராகவும் அரச சார்பற்ற நிறுவனத்திலும் பணிபுரியும் மணமகனுக்கு, தொழில் செய்பவர் கட்டாயமல்ல, கடவுள் அன்புள்ள மணமகளைத் தேடுகின்றனர். (தலவாக்கலை).

## மீள் பிரசுரம்

(இல M2005-412) வயது 36, உயரம் 5'8". RC சபையைச் சேர்ந்த, பொது நிறம். அபிவிருத்தி உதவியாளராக தொழில் புரியும் மணமகனுக்கு 28-32 வயதிற்குட்பட்ட, RC சபையைச் சேர்ந்த, மணமகளை தேடுகின்றனர். ஆசிரியை தொழில் புரிபவராயின் விரும்பத்தக்கது.(யாழ்ப்பாணம்).

(இல F2006-820) வயது 24, பொதுநிறம். அங்கிலிக்கன் சபை. க.பொ.த(சா/த) கற்ற கொட்டகலையை பிறப்பிடமாக கொண்ட வீட்டிலிருக்கும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (பதுளை).

(இல F2006-830) வயது 39, உயரம் 5'. R.C சபை. பொதுநிறம். குடும்ப பொறுப்புள்ள மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (நீர்கொழும்பு).

(இல F2005-417) வயது 37, உயரம் 5'2". D.Pharm படித்து Pharmaceutical நிறுவனம் ஒன்றில் தொழில்புரியும் கிறிஸ்தவ மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் (கல்கிஸ்சை).

(இல F2005-418) வயது 38, உயரம் 5'4". D.Pharm படித்து Pharmaceutical நிறுவனம் ஒன்றில் தொழில்புரியும் கிறிஸ்தவ மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் (கல்கிஸ்சை).

(இல M2006-759) வயது 36, உயரம் 5'6" செந்நிறமுடைய, அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த, தனியார் வங்கியில் Executive வாக பணிபுரியும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 5)


(இல M2006-760) வயது 35, உயரம் 5'7" மாநிறம். அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த, U.K. கம்பெனியொன்றில் Manager ராக பணிபுரியும் Business Management பட்டதாரியான மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 5)

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளியாகும் இந்த சஞ்சிகையை புதிதாகப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: சத்தியவசனம் தபால் பெட்டி 1012, கொழும்பு, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் எதைக் குறித்து கலங்குகிறீர்கள்?

அதிக படிப்பு
உங்களை
வருத்துகின்றதா?






இவர்களுக்கோ
அடிப்படைகூட
இல்லை!

எதை
உண்பது என
யோசிக்கிறீர்களா?





இவர்களோ
பசியினால்
வாடுகிறார்கள்!

உடல் பருமனை
குறைக்க
விரும்புகிறீர்களா?






இவர்களோ
பட்டினியால்
சாகிறார்கள்!


பெற்றோரின் அன்பு
உங்களை
எரிச்சலூட்டுகிறதா?





இவர்களுக்கோ
பெற்றோர்களே
இல்லை!

ஒரே விளையாட்டு
உங்களுக்கு
சலிப்பூட்டுகிறதா?





இவர்களுக்கோ
மண்டை ஓடுதான்
விளையாட்டுப்
பொருள்!

எந்தப் பாதனியை
வாங்குவதென்று
குழப்பமா?






இவர்களுக்கோ
இது ஒன்றுதான்
தெரிவு!

நீங்கள் உறங்கும்
கட்டிலைக் குறித்து
முறுமுறுக்கிறீர்களா?





இவர்களோ
நித்திய
இளைப்பாறுதலை
விரும்புகிறார்கள்!

இனிமேலும்
நீங்கள்
முணுமுணுப்பீர்களா?
நிலையற்ற
இவ்வாழ்வில்
உங்களுக்கிருக்கும்
சலுகைகளை
நினைத்து
அவற்றுக்காக
நன்றி கூறுங்கள்!
உங்களிடம்
இருப்பதை
மற்றவர்களோடு
பகிர்ந்து
கொள்ளுங்கள்!
உங்கள்
முணுமுணுப்பை
நீக்கிவிட்டு,
கடவுள் தந்துள்ள
நன்மைகளுக்கு
நன்றியுள்ளவர்களாக
இருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org